


# The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

**1879 -1916** ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 6 இதழ் - 5 செப்டம்பர்-அக்டோபர் 2020




**R5191**

## THE COMING MEMORIAL SUPPER

## வரவிருக்கின்ற நினைவுகூருதலின் இராப்போஜனம்

*"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." 1 கொரிந்தியர் 11:24,25*

நம்முடைய பாவங்களுக்காக, நம்முடைய பாவங்களுக்காக மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களுக்காகவும் நமது கர்த்தரின் மாபெரும் பலியின் நினைவுகூருதலாக அவரால் ஏற்படுத்தப்பட்ட இராப்போஜனமானது அதன் எளிமை மற்றும் அதன் சிறப்பு கவனத்தை ஈர்க்கும்படியாக இருக்கிறது. உலகின் மாமனிதர்கள் தங்களைப்பற்றி நினைவுகளை நிலைத்திருக்கப்பண்ண மிகவும் வித்தியாசமான வழிவகைகளை எப்பொழுதும் நாடுகிறார்கள். இவர்கள் தங்கள் மகத்துவங்களையும், சிறப்புகளையும் தங்களது தொண்டர்களுக்கு நினைப்பூட்ட முயற்சித்தாலும் – அதிலும் விசேஷமாக நமது கர்த்தருடைய விஷயத்தில் காணப்படுகிறது போல ஒரு குற்றவாளியைப் போல அவமானமான மற்றும் நிந்தனையான மரணத்திற்கான நினைவுகூருதலையும் ஞாபகார்த்தத்தையும் ஏற்படுத்தவே மாட்டார்கள். வேறொருவராக இருந்தால் தனது வல்லமையான செயல்களுக்காக நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்கே கட்டளையிட்டிருப்பார்கள். உதாரணமாக லாசருவை உயிர்த்தெழுப்பினது, அல்லது கடலின் புயலை அமைதிப்படுத்தினது அல்லது ஜனங்கள் குருத்தோலைகளுடன் இராஜாவுக்கு ஓசன்னா என்ற கோஷத்துடன் எருசலேமுக்கு அவரது வெற்றி பிரவேசத்திற்கு நினைவுச் சின்னங்களை ஏற்படுத்த கட்டளையிட்டிருப்பார்கள்.

ஆனால் நமது கர்த்தரோ, தமது மற்றும் தேவனுடைய கணிப்பிலும் மகத்துவமான வேலையாக காணப்பட்ட காரியத்தையே, அதாவது நமது சார்பிலான அவரது பாவ நிவாரண பலியையே, தமது பணியின் மற்ற அம்சங்களைக் காட்டிலும் அதிகமாய் அவரது உண்மையான பின்னடியார்களால் மற்றும் அவர்களால் மாத்திரமே உணர்ந்து கொள்ளப்படப் போகிற காரியத்தை தமக்கு நினைவு கூருதலாக தெரிந்து கொண்டார். அவரது பின்னடியார்கள் அவரது ஆச்சரியமான வார்த்தைகள் அல்லது கிரியைகளில் ஏதோ ஒன்றினை நினைவுகூருதலாக மதித்திருக்க முடியும் என்பது உண்மைதான்; ஆனால் உலகத்தாரால் கூட அவைகள் உணர்ந்து கொள்ளவும் முடியும். ஆனால் நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும் பாவநிவர்த்திக்கும் அடிப்படையான நமது மீட்கும் பொருளின் பலியாக அவரது மரணத்தின் மதிப்பை அவர்களால் உணர முடியாது. அது இன்னமும் கூட தெரிந்து கொள்ளப்பட்ட அர்ப்பணம் பண்ணினவர்களாகிய சிறுமந்தையினரைத் தவிர வேறு எவராலும் முழுமையாக புரிந்து கொள்ளப்படவில்லை. மேலும் இது இவர்களுக்காகவே நினைவுகூரும் சின்னங்களாக ஏற்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. யூதாஸ் அங்கே இருந்தாலும், அவனுக்கு துணிக்கையானது கொடுக்கப்பட்டது. இராப்போஜனம் முடிவதற்கு முன்னரே மற்றவர்களை விட்டுவிட்டு அவன் வெளியே சென்றான். இது இந்த யுக முடிவில் சிறு மந்தையினர் தங்கள் கர்த்தரோடு, அவரது பாடுகளில் தங்களது பங்கினை நிறைவேற்றுவதற்கு முன்னதாக உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியினால் நிறைவேற்றப்பட்ட மீட்கும் பொருளை சரியாக மதிப்பிடாதவர்களும் உணராதவர்களுமாகிய அனைவரும் உண்மையுள்ளவர்களின் கூட்டத்திலிருந்தும் ஐக்கியத்திலிருந்தும் வெளியேற்றப்படுமளவிற்கு சத்தியம் என்னும் துணிக்கையானது மிகவும் பலமுள்ளதாக இருக்கும் என்பதை குறிக்கிறது என்பதில் ஐயமில்லை. (1 யோவான் 2:19)

### பஸ்கா இராப்போஜனத்தின் தேதி

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களது விடுதலையையும் அந்த சமயத்தில் தங்களது முதற்பேறானவர்கள் காக்கப்பட்டதையும் நினைவுகூரும்படி பஸ்கா ஆட்டை யூதர்கள் புசிக்கிற பஸ்கா இராப்போஜனத்தின் தேதியானது யூத முறைமையான சந்திர காலக்கணக்கின்படி கணக்கிடப்பட்டது. (யாத்திராகமம் 12:2–14) நம்மைப்போல மாதங்களை பிரிக்கிறதற்கு பதிலாக, அவர்கள் அமாவாசையை ஒரு புதிய மாதத்தின் ஆரம்பத்தை குறிப்பதற்கு அனுமதித்தனர். சூரிய காலக்கணக்கிற்கும் சந்திர காலக்கணக்கிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை சரி பண்ண, வசந்த கால சம இரவு பகல் நாளின் அருகே வரும் அமாவாசையில் புதிய வருடம் எப்பொழுதும் ஆரம்பிக்கப்படுகிறது. தங்கள் மதம் சம்பந்தமான விழாக்களை ஆசரிப்பதில் யூதர்கள் இன்னமும் இந்த கணக்கீட்டு முறையையே கடை பிடிக்கிறார்கள். மேலும் நமது கர்த்தரும், அப்போஸ்தலரும் ஆதித் திருச்சபையினரும் இதே விதியை, நமது கர்த்தரின் கடைசி இராப்போஜனத்தின் வருடாந்திர ஆசரிப்பின் தேதியை நிச்சயிப்பதற்கு பயன்படுத்தியதால், நாமும் அதையே பின்பற்றுகிறோம்.

வசந்த கால சம இரவு பகல் நாளைத் தொடரும் முதல் அமாவாசையானது இந்த வருடத்தில் (1913) ஏப்ரல் 8ஆம் தேதியில் வருவதாக எபிரேய பஞ்சாங்கத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு வேளை இது எருசலேமில் கணிக்கப்பட்டிருக்கும். யூதருடைய புனித வருடத்தின் முதலாம் மாதமாகிய நீசான் மாதத்தின் முதலாம் நாள் மாலை 6 மணிக்கு புது வருடம் ஆரம்பிக்கிறது. எபிரேயர்கள் நீசான் மாதம் முதலாம் தேதி எண்ணத்துவக்கி பத்தாம் தேதி பஸ்கா ஆடு மந்தையிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டது. 14ஆம் தேதியில் (பௌர்ணமி அன்று*) "சாயங்காலங்களுக்கிடையே" (நீசாம் மாதம் 13–ஆம் தேதி மாலை 6 மணிமுதல் 14ஆம் தேதி மாலை 6 மணிக்குள் ஏதேனும் ஒரு நேரத்தில்) ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு புசிக்கப்பட வேண்டும். பதினைந்தாம் தேதி அவர்களது பஸ்கா பண்டிகை ஆரம்பித்து, ஏழு நாட்கள் நீடிக்கிறது. இதன் முதலாம் மற்றும் ஏழாம் நாட்களானது விசேஷித்த பரிசுத்த நாட்களாக, ஓய்வு நாட்களாக அல்லது "பிரதான" நாட்களாக ஆசரிக்கப்படுகின்றன. (யாத்திராகமம் 12:16) பதினாறாம் தேதியில் வாற்கோதுமையின் அறுவடையின் முதற்பலன்கள் ஒரு ஓமர் அளவுக்கு கர்த்தருக்குச் செலுத்தப்பட்டன. ஐம்பது நாட்கள் கழித்து (பெந்தெகொஸ்தே நாளில்) இரண்டு அப்பங்கள் கர்த்தருக்கு அசைவாட்டும் காணிக்கையாக செலுத்தப்பட்டன. (லேவியராகமம் 23:17)

[*சூரியன் கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அடையாளமாக இருப்பதால், சந்திரன் இஸ்ரயேல் தேசத்திற்கு அடையாளமாக இருக்கிறது. (வெளிப்படுத்தல் 12:1) பன்னிரண்டு மற்றும் சில சமயங்களில் பதிமூன்று சந்திர மாதங்களானது அந்த ஜாதியினரின் கோத்திரங்களை அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட போது, சந்திரனானது முழுபௌர்ணமியாக இருந்தது. பின்னர் சந்திரனானது தேய்வுற ஆரம்பித்து, பௌர்ணமிக்கு முன்பு வளர்வதற்குரிய காலத்தை எடுத்துக் கொண்டது போலவே தேய்வதற்கும் காலம் எடுத்துக் கொண்டது. ஆகையால் கிறிஸ்துவின் மரணமானது இஸ்ரயேல் சரித்திரித்தின் இரண்டு சரிசமமான பாகங்களுக்கிடையேயான திருப்புமுனையாக இருந்தது. (தொகுதி 2, ஆங்கிலத்தில் பக்கம் 218, தமிழில் பக்கம் 235 ஐப்பார்க்கவும்.)*

*யூதர்கள் அசுசியடைந்ததின் காரணமாக, பஸ்காவை அதன் சரியான காலத்தில் கடைபிடிக்க முடியாமல் போவதால், அப்படிப்பட்டவர்கள் இரண்டாம் மாதத்தின் 14ஆம் தேதியில் (அடுத்த பௌர்ணமியில் – எண்ணாகமம் 9:8–13) அதைக் கைக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். மேசியா அவர்களிடம் அனுப்பப்பட்டபோது அவரை தங்கள் மீட்பர் என்று (அறியாமையினால்) ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் அனைவரும் இழந்த அனைத்தையும் திரும்ப பெறும் காலங்களில் அவர்கள் தேசமானது (சந்திரன்) மீண்டும் முழுமையான ஆசீர்வாதத்தை பிந்திய அறுவடையில் பெறும் சந்தர்ப்பத்தை பெறுவார்கள் என்பதே இதன் படிப்பினையாக காணப்படுகிறது.*]

யூதர்களால் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட்டு வந்த இந்த காரியங்கள், நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறபடி மாபெரும் மற்றும் பிரமாண்டமான நிகழ்வுகளுக்கு நிழலாக இருக்கின்றன. உண்மையான பஸ்காவில் (கடந்து போகுதலில்) இஸ்ரயேலானது முதற்பேறானவர்களின் சபை என்று ஆசீர்வதிக்கப்படவும், அங்கீகரிக்கப்படவும் வேண்டுமென்றால், அவர்கள் பஸ்கா பண்டிகைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாகவும் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகவும் இயேசுவை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பதை, பத்தாம் தேதியில் ஆட்டுக்குட்டியானது தெரிந்து கொள்ளப்படுதல் அடையாளப்படுத்தி காட்டுகிறதாக இருக்கிறது. அந்த நாளில்தான் நமது கர்த்தர் அவர்களது ராஜாவாக, கழுதையின்மேல் ஏறி பட்டணத்திற்குள் வந்தபோது, இறுதியாக தம்மை அந்த ஜாதியாருக்கு காண்பித்தார். (யோவான் 12:12–16 ஒப்பிட்டு பார்க்கவும்) எனினும் தேவ ஆட்டுக்குட்டியை ஏற்றுக் கொள்ள தவறின அவர்கள் உடனடியாக தள்ளப்பட்டு, நிழலான முதற்பேறானவர்களாக இருப்பதிலிருந்தும் நிறுத்தப்பட்டார்கள்.

(இந்த வருடத்தில் [1913] ஏப்ரல் 20–ஆம் தேதி ஞாயிறு மாலை 6 மணிக்கு ஆரம்பித்து, 21ஆம் தேதி மாலை வரை நீடிக்கின்ற) 14ஆம் தேதியில்தான் பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டு புசிக்கப்பட வேண்டும். (ஒரு வேளை தெய்வீக ஏற்பாட்டின் இந்த ஒரு நோக்கத்திற்காகத்தான்) எபிரேய காலக்கணக்கீடுதலானது கடைசி இராப்போஜனத்தின் புசித்தல் கர்த்தர் அறைப்பட்ட அதே நாளில் நிகழ்வதற்கு அனுமதித்து இருக்கின்றது. (சிலுவையில் அறையப்படும் வரை முடிவடையாத நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும் விதமாக ஆசரிக்கப்பட்ட) ஆட்டுக்குட்டி, கசப்பான கீரைகள், மற்றும் புளிப்பில்லாத அப்பம் ஆகியவை அடங்கிய பஸ்கா இராப்போஜனமானது, மாலை ஆறு மணிக்குமேல் புசிக்கப்பட்டது. பின்னர் தொடர்ந்து நிஜமான சரீரத்தையும் இரத்தத்தையும் அடையாளப்படுத்துகிற அப்பமும் திராட்ச ரசமும் அடங்கிய நினைவு கூடுதலின் இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டது. இதிலிருந்து வருடந்தோறும் அந்த நாள் வரும்போது அவரது பின்னடியார்கள் ஆட்டின் மாம்சத்தை புசிப்பதற்கு பதிலாக, அவரது இரத்தத்தின் பலனால் கிடைக்கப்பெற்ற மாபெரும் கடந்துபோகுதலின் நினைவுகூருதல் ஆசரிக்கப்பட வேண்டும்.

நீசான் மாதம் 16ஆம் தேதியில் ("ஓய்வு நாளுக்கு மறுநாள்" அல்லது பஸ்கா பண்டிகையின் மறுநாள்) வாற் கோதுமையின் முதற்பலனின் கதிர்கட்டை அசைவாட்டுதலானது, "நித்திரை அடைந்தவர்களில்"† முதற்பலனாக, நமது கர்த்தராகிய கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறதாய் இருக்கிறது. (லேவியராகமம் 23:5,6,11, 15–17; 1 கொரி 15:20)

[†*நமது கர்த்தர் 24 மணி நேரங் கொண்ட முழு மூன்று நாட்கள் கல்லறையில் இல்லாமல், மூன்று இரவு பகலின் ஒரு பகுதி மட்டுமே இருந்தார் என்று வேதாகம பாடங்கள், தொகுதி 2 இல் கொடுக்கப்பட்டது சரி என்பதற்கான பலமான ரூபகாரத்தை இங்கே பார்க்கிறோம்; அவர் வெள்ளிக்கிழமை சிலுவையிலறையப்பட்டார், அதைத் தொடர்ந்து வந்த ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். இதை, நீசான் மாதம் 14ந் தேதி பஸ்கா ஆடு அடிக்கப்பட்டதையும், நீசான் மாதம் 16ந் தேதி வாற்கோதுமையின் முதற்பலன்களின் கதிர்கட்டின் அசைவாட்டுதலையும் நிழலாக காண்பித்து, காரியங்கள் அனைத்தையும் தீர்க்கிறது. நமது ஆண்டவர் "வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்" என்று அடிக்கடி சொல்லப்பட்ட கூற்றை அது ஒத்துக் கொள்ளுகிறது. (1 கொரிந்தியர் 15:4; லூக்கா 24:46) முதற்பலன்களைக் குறித்த இந்த வேதவாக்கியம் ஒரு நிழல் என்பதையும், அது நமது ஆண்டவரின்*

*உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது என்பதையும் நாம் ஞாபகத்துக்கு கொண்டு வருகிறோம். பிறகு சரித்திரம், முறைமை மற்றும் பழக்க வழக்கங்கள் வெள்ளிக் கிழமையையும் ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையையும் நமது ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் ஆசரிப்பாக குறிப்பிடுவது, சாதாரண காரியமாக இருந்தாலும், அதை தவறாக குறிப்பிடுவதற்கு காரணம் இல்லாதிருக்கும்பட்சத்தில் அதற்கு முக்கியத்தும் இருக்க வேண்டும். நமது கர்த்தர் மூன்று பகல் மூன்று இரவு பூமியின் வயிற்றில் இருப்பார் என்ற இந்த ஒரு வேத வாக்கியமே இந்த எல்லா உண்மைகளுக்கும் எதிராக இருக்கிறது. இதற்கு கொடுக்கக்கூடிய ஒரே விளக்கம் என்னவென்றால் இது குறிப்பாக சொல்லப்படாமல் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது என்பதே, மூன்றாம் நாள் வரை மரணத்தில் இருந்தது என்ற யோசனையை நீக்குவதற்காகவே, இரவுகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்று பகல் இரவின் பகுதியில் மட்டுமே நமது கர்த்தர் கல்லறையில் இருந்திருக்க வேண்டும் என்று இந்த கூற்று புரிந்து கொள்ளப்பட வேண்டும். இவையெல்லாம் அவர் நீசான் மாதம் 14ஆம் தேதி மரித்து, 16ஆம் தேதி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதை ரூபகாரப்படுத்துகிறது.*]

ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரண்டு அப்பங்கள் அசைவாட்டும் காணிக்கையாக்கப்படுவது என்பது சபையை தேவனுக்கு முன்பாக நிறுத்துவதையும் மாபெரும் பிரதான ஆசாரியனுடைய புண்ணியத்தினால் சபை ஏற்றுக் கொள்ளப்படுவதையும் அடையாளப்படுத்துகிறது. இந்த ஏற்றுக் கொள்ளப்படுதலானது பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் சபையானது உண்மையில் "ஒரே அப்பமாக" (1 கொரிந்தியர் 10:17) இருக்கிறது. இரண்டு அப்பங்களானது பாவ நிவாரண நாளில் இடம்பெறும் இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களினால் அடையாளப்படுத்தப்படுகிற அதே காரியங்களையே அடையாளப்படுகிறதாய் இருக்கின்றது. இது சமர்ப்பிக்கப்படும் அனைவரும் கிறிஸ்து இயேசு மூலமாக தேவனுக்கு ஏற்புடையவர்களாயிருந்தாலும், சமர்ப்பிக்கப்படுகிற அனைவரும் கடைசி வரையில் உண்மையுள்ளவர்களாயிருக்க மாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதை சுட்டிக் காட்டுகிறது. ஆகையால் இரண்டு அப்பங்கனானது, அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு வகுப்பாரைக் குறிக்கிறது. அதாவது ஜெயங்கொள்ளுகிற சிறுமந்தையையும் மற்றும் உலகத்தை ஜெயங்கொள்ளுவதின் மூலம் "பரம அழைப்பை" உறுதிப்படுத்தாத திரள் கூட்டத்தாராகிய அர்ப்பணம் பண்ணப்பட்ட தேவனுடைய பணிவிடைக்காரர்களையும் அடையாளப்படுக்கிறது.

புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு ஆகியவற்றின் தேதிகளை கணக்கீடு செய்வதில் எபிகோபல் மற்றும் ரோமன் கத்தோலிக்க சபையினர் தோரயமாக இருக்கின்றனர். முன்பிருந்த முறையிலிருந்து வேறுபடவும் செய்கின்றனர். வசந்தகால சம இரவு பகல் நாளுக்கு பின்வரும் பௌர்ணமியை தொடர்ந்து வரும் முதல் ஞாயிறை ஈஸ்டர் ஞாயிறாகவும் அதற்கு முன் வரும் வெள்ளியை புனித வெள்ளியாகவும் ஆசரிக்கின்றனர். இந்த கணக்கீட்டு முறைமையானது நாம் அங்கீகரித்திருக்கிற யூத முறைமைக்குப் பதிலாக, கிபி 325–இல் நைஸ் (Nice) ஆலோசனைக் குழுவினால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பஸ்கா என்ற பெயரானது (ஈஸ்டர் **ஞாயிறு என்றில்லாமல்) நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. போப்பு மார்க்கமானது, அரசியல் செல்வாக்கு பெற்ற பிறகு, அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருந்த புறஜாதியினர் இந்த அமைப்பிற்குள் நுழைந்து குவிய ஆரம்பித்த பிறகே "பஸ்கா" என்ற பெயருக்கு பதிலாக "ஈஸ்டர்" என்ற பெயர் ஏற்படுத்தப்பட்டது, ஏனெனில் பஸ்கா ஆசரிக்கப்படுகிற அதே காலப்பகுதியில் புற மதத்தினரும் வசந்த கால தேவதையாகிய ஈஸ்டெரா (Estera) ஜெர்மனியில் ஓஸ்டரா (Ostara) என்று அழைக்கப்படும் தங்கள் ஈஸ்டர் தேவதைக்கு பண்டிகை ஆசரிக்கும் வழக்கத்தில் இருந்தனர். இதுவும் அதிக எண்ணிக்கையிலான ஜனங்களை கூட்டுவதற்கும் செல்வாக்கை அதிகப்படுத்துவதற்கும் பேராசை கொண்ட "குருமார் வகுப்பினர்" (Clergy) கையாண்ட அநேக முறைமைகளில் ஒன்றாகும்.

(*****அப்போஸ்தலர் 12:4இல் இடம் பெறும் ஈஸ்டர்** [ஆங்கில வேதாகமம்] என்னும் வார்த்தையானது தவறான மொழி பெயர்ப்பாகும். அது பஸ்கா என்றே தமிழ் வேதாகமத்தில் உள்ளது போல் மொழி பெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். திருத்திய மொழி பெயர்ப்பை பார்க்கவும்.*)

சில சமயங்களில் யூத கணக்கீட்டு முறைமையும் ரோம சபையின் கணக்கீட்டு முறைமையும் ஒரே நாட்களை குறிப்பிடுகிறது. ஆனால் அடிக்கடி அல்ல, சில சமயங்களில் கணக்கீடுதலானது கிட்டத்தட்ட ஒரு சந்திரன் அல்லது ஒரு மாத அளவு வித்தியாசப்படுகிறது.

யூதர்கள் பஸ்கா வாரத்தினை நீசான் மாதம் 15ஆம் தேதியாகிய ஏப்ரல் 22ஆம் தேதியில் (அதாவது ஏப்ரல் 21ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு) ஆரம்பித்து ஒரு பண்டிகையாக ஆசரிப்பார்கள். நாம் நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பண்டிகை வாரத்தினை ஆசரிக்காமல் முந்தின நாளில் 1913 ஏப்ரல் 20 ஆம் தேதி மாலை ஆரம்பிக்கிற நீசான் 14ஆம் தேதியில் ஆசரிக்கிறோம். இது பஸ்கா அடிக்கப்பட்டு, புசிக்கப்பட்ட நாளின் சரியான வருடாந்திர நாளாகும். இது உண்மையான தேவ ஆட்டுக்குட்டியாகிய நமது கர்த்தராகிய இயேசுவின் மரண வருடாந்திர நாள். ஏனெனில் இவரது பலியின் மூலமாகத்தான் "முதற்பேறானவர்களின் சபையானது" மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து போகுதல் முதலாம் உயிர்தெழுதலில் நிறைவடைகிறது. பஸ்கா பண்டிகை வாரத்தின் நிஜமானது, உண்மையான இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் அனைவரின் இருதயத்தின் சந்தோஷத்தில் காணப்படுகிறது; ஏழு நாட்கள் என்பது சந்தோஷம் மற்றும் இரட்சிப்பின் பூரணத்தை அல்லது முழுமையை குறிக்கிறது.

கணக்கிடுதல் தொடர்பான அநேகம் கேள்விகளுக்கு நாம் பொதுவான பதிலாக விவரங்களை நாம் கொடுத்திருக்கிறோம். காரணம் இதற்கு ஏதேனும் மிகுந்த முக்கியத்துவம் இருப்பதினாலோ அல்லது சரியான ஆண்டு நிறைவு நாளில் அடிமைத்தனம் இணைக்கப்பட்டதினாலோ அல்ல. கிறிஸ்துவினால் விடுதலைபண்ணப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட எந்தவித அடிமைத் தனமும் இல்லை என்பதை

நாம் அங்கீகரிக்கிறோம். "என்னை நினைவுகூரும்படி இதை (இந்த வருடாந்தர நினைவுகூருதலை நீங்கள் ஆசரிக்கும் ஒவ்வொரு முறையும்) செய்யுங்கள்" என்று நமது கர்த்தர் சொன்னபோது, அவரது நோக்கத்தின்படி நினைவுகூருதலின் இராப்போஜனத்தை அதன் சரியான வருட நினைவு நாளில் நாம் ஆசரிக்க விருப்பமுடையவர்களாக இருப்பினும் இதை நாங்கள் கடமையாகப் பார்ப்பதைவிட ஒரு சிலாக்கியமாகவே கருதுகிறோம்; ஒருவேளை அறியாமை அல்லது தவறாக புரிந்துகொள்ளுதலின் காரணமாக அந்த நாளை தெரிந்து கொள்ளும் விஷயத்தில் நாம் தவறு செய்தாலும், கர்த்தர் நமது நல்ல நோக்கங்களை ஏற்றுக் கொண்டு, தவறை மன்னித்து அவரது ஆசீர்வாதத்தை அருளுவார் என்று நாங்கள் நம்புகிறோம். தவறான போதனைகள் மற்றும் மனித பாரம்பரியங்களின் காரணமாக, அவரது மரணத்திற்கான இந்த நினைவுகூருதலை ஆசரிப்பதற்கென, அவர் நியமித்துள்ள அதன் வருடாந்திர நாளை தெரிவு செய்வதற்கு பதிலாக, வேறு காலங்களையும், நேரங்களையும் தெரிவு செய்யும் அவரது அநேக பிள்ளைகளின் நல்ல நோக்கத்தை கர்த்தர் ஏற்றுக் கொள்ளுகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். இது போலவே அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்த தேதி ஜுலை 4 என்பதையும் இதுவே இதை கொண்டாடுவதற்கு நியமிக்கப்பட்ட சரியான தேதி என்பதையும் அறியாத அல்லது மறந்துபோன ஒருவர், வருடத்திற்கு மூன்று, நான்கு அல்லது ஐந்து முறை அதைக் கொண்டாடினால் அவரது தேசப்பற்று நோக்கங்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

மற்ற சத்தியங்களைப் போலவே, இருண்ட காலத்தின் குப்பைகளின் கீழ் நீண்ட காலமாகப் புதைக்கப்பட்டுக் கிடந்த இதையும் இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தெளிவுபடுத்துகிறார். மேலும் அவரது ஜனங்களாக உண்மையாக இருப்பவர்கள் அனைவரும் சத்தியத்திற்காகவும் மற்றும் அதன் மீதுள்ள உரிமைக்காகவும் தேவனுடைய வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மற்ற அனைத்து பாடங்களுக்காகவும் ஆவலாய் இருக்கிறார்கள்.

## நீங்கள் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததை கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; இதை நீங்கள் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம். கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1 கொரிந்தியர் 11:23-26)

கர்த்தருடைய மரணம் என்ற சொற்றொடர் எதைக் குறிக்கிறது மற்றும் எதைக் குறிக்கவில்லை என்பதை நேர்மையான மனமுடையவர்களிடத்தில் விவாதிப்பதற்கு எந்த அவசியமும் இல்லை. மீட்கும் பொருள் பற்றிய உபதேசத்திலிருந்து அல்லது மீட்கும் பொருள் உபதேசத்துடன் சம்பந்தப்பட்ட நியாயமானது யூகங்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவலில், சிலர் வேதவாக்கியங்களுக்கு முரணாக, நமது கர்த்தருக்கு இரண்டு மரணங்கள் நிகழ்ந்தன என்றும், ஒன்று அவர் உலகத்திற்குள் வந்தபோது நிகழ்ந்தது என்றும், மற்றொன்று கல்வாரியில் நிகழ்ந்தது என்றும் கூறுகிறார்கள்; கல்வாரியில், "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த கிறிஸ்து இயேசுவின்" மரணமானது மற்ற மரணத்தைக் காட்டிலும் அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அல்ல என்றும் கூறுகிறார்கள். அவர்கள் "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்" என்று வேத வாக்கியம் தெரிவிக்கும் உண்மையையும், நமது கர்த்தரினாலோ அல்லது அவரது அப்போஸ்தலர்களினாலோ குறிப்பிடப்பட்ட ஒரே மரணம், கல்வாரியில் நிகழ்ந்த மரணமே என்ற உண்மையையும் வேண்டுமென்றே அறியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

அவர் எருசலேமில் நிறைவேற்ற வேண்டிய மரணத்தைக் குறித்தே அவர் பேசினதாக அப்போஸ்தலர்கள் தெரிவிக்கின்றனர். நமது மீட்பரின் இந்த ஒரே ஒரு மரணம் மாத்திரமே, அவரது சரீரம், அவரது மாம்சம், நமக்காக மீட்கப்பட்டது, போன்ற ஞாபகப் பொருட்களினால் அடையாளப்படுத்தப்படுகிறது. நித்திய ஜீவனைப் பெறுகிற அனைவரும் அதன் புண்ணியத்திலும் ஜீவனிலும் பங்குபெற வேண்டும். இந்த முக்கியமான சந்தேகத்தில், "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்."

எப்படி தண்ணீர் ஞானஸ்நானமானது முக்கியமானதாக காணப்படாமல், அது உண்மையான ஞானஸ்நானத்தை அடையாளப்படுத்துகிறதாய் மாத்திரம் காணப்படுகிறதோ, அதுபோலவே, அடையாளங்களாகிய அப்பத்திலும் திராட்சரசத்திலும் பங்குபெறுதல் என்பது மிகவும் முக்கியமான விருந்திற்கு அடையாளமாக மாத்திரமே காணப்படுகின்றது. அதாவது அவரது பிட்கப்பட்ட சரீரம் மற்றும் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலமாக நமக்கு நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகிற கிறிஸ்துவின் புண்ணியத்தை நம்முடையதாக்கிக் கொள்வதற்கு அடையாளமாக மாத்திரம் இருக்கிறது. இப்படியாக அவரால் நிறைவேற்றப்பட்ட பலியை விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டு, அதே விசுவாசத்தினால் அவரால் போதிக்கப்பட்டபடி, மனிதனாகிய கிறிஸ்து இயேசு பெற்றிருந்ததும், அவரால் நமக்காக மரணத்தில் கொடுக்கப்பட்டதுமான புண்ணியங்கள், பரிபூரணங்கள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் நமதாக்கிக் கொண்டு, உண்மையிலேயே நாம், நித்திய ஜீவனின் அப்பத்தை, பரத்திலிருந்து நமக்காக தேவன் அனுப்பிய அப்பத்தை, நமது இருதயத்துக்கு கொடுக்கிறோம். இதுதான் உண்மையான அப்பம். இதை புசிப்பதின் மூலம் நித்திய ஜீவனை பெறுகிறோம். இதுவே அதில் சரியாகவும் நுண்ணறிவோடும் பங்குபெறுகிற அனைவருக்கும் சொல்லர்த்தமான அப்பமானது அடையாளப்படுத்துகிறதும் குறிப்பிடுகிறதுமான அடிப்படையான பொருளாக இருக்கிறது. அது ஆதாமுக்காகவும்

அவரது குடும்பத்திற்காகவும் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கிற மீட்கும் பொருளின் ஒரு நினைவுகூருதலாகும்.

## அப்பமும் பாத்திரமும்

இன்னொரு கருத்து: அப்பமானது புளிப்பில்லாதது, புளிப்பு என்றால் கெட்டுப்போகுதல், அழுகுதல், ஆகவே இது பாவத்திற்கு ஒரு அடையாளமாக இருக்கின்றது. இந்த பாவமானது மனுக்குலத்தில் கிரியை நடப்பித்து அழிவையும் மரணத்தையும் உண்டாக்குகிறது. ஆகையால் இந்த அடையாளமானது, நமது கர்த்தராகிய இயேசு பாவமில்லாதவராக, கறைதிரையற்ற ஆட்டுக்குட்டியாக, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவருமாய்" இருந்தார் என்பதை அறிவிக்கிறது. அவர் ஆதாமின் சந்ததியில் வந்திருப்பாரானால், வழக்கம்போல் ஏதோ ஒரு பூமிக்குரிய தந்தையின் மூலமாக வந்திருப்பாரானால், அவரும் கூட மற்ற மனிதர்களைப் போல ஆதாமின் பாவத்தினால் புளிப்பானவராக இருந்திருப்பார். ஆனால் அவரது ஜீவன் கறைதிரையற்ற நிலையில் பரலோக சுபாவத்திலிருந்து பூமிக்குரிய நிலைக்கு மாற்றப்பட்டார். ஆகையால் அவர் "வானத்திலிருந்து வந்த அப்பம்" என்று அழைக்கப்படுகிறார். (யோவான் 6:41) ஆகவே தேவன் கொடுத்திருக்கிற பரிசுத்தமான, புளிப்பற்ற, மாசற்ற அப்பத்தை உணர்ந்துகொள்ளுவோமாக; அவரை புசிப்போமாக; சத்தியத்தை விசேஷமாக அவரது சத்தியத்தை புசித்து ஜீரணித்து, விசுவாசத்தினாலும் அவரது நீதியினாலும் சொந்தமாக்கிக் கொள்ளுவோமாக; மேலும் அவரை வழியாகவும், ஜீவனாகவும் அடையாளம் கண்டு கொள்ளுவோமாக.

அப்போஸ்தலர் தெய்வீக வெளிப்படுத்துதலின் மூலமாக இந்த நினைவுகூருதலின் பொருட்கள் குறித்து இன்னும் அதிகமாக அர்த்தத்தை தெரிவித்துள்ளார். அப்பமானது நமது கர்த்தராகிய இயேசுவை மாத்திரம், தனிப்பட்ட முறையில் அடையாளப்படுத்துகிறதாயிராமல், இப்படியாக அவரில் நாம் பங்கு பெற்ற பிறகு (அவரது நீதியை நமக்குரியதாக்கிக்கொள்வதன் மூலம் நாம் நீதிமானாகப்பட்ட பிறகு) நாம் அர்ப்பணத்தின் மூலமாக உலகத்தின் உணவாகிய பிட்கப்பட்ட ஒரே அப்பத்தின் ஒரு பாகமாக, நாம் அவரோடு இணைந்தவர்களானோம். (1 கொரிந்தியர் 10:16) இது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளாக நாம் இப்பொழுது கிறிஸ்துவின் பாடுகளிலும் மரணத்திலும் பங்கு பெறுவதற்கான நமது சிலாக்கியத்தை தெரிவிக்கிறது. இது எதிர்கால மகிமைகளில் அவரோடு கூட உடன் சுதந்தரராவதற்கும், பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பதும், ஜீவனை அளிக்கக் கூடியதுமான மாபெரும் வேலையில் பங்காளிகளாவதற்கு நிபந்தனையாக இருக்கிறது.

இதே கருத்தானது அப்போஸ்தலரால் மீண்டும் மீண்டுமாக பல்வேறு அடையாளங்களினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அவையனைத்தைக் காட்டிலும் இவ்வடையாளமே ஆற்றல் மிக்கதாக இருக்கிறது. அதாவது, சுவிசேஷ யுகத்தில் சபையானது (கிறிஸ்துவின் சரீரம்–கொலோ 1:24) தங்கள் தலையோடு கூட "ஒரே அப்பமாக" பிட்கப்படுகிறவர்களாக இருக்கின்றனர். இது நமது தலையானவருடனான ஐக்கியத்தையும் அந்நியோந்நியத்தையும் விளக்குகிறதாயிருக்கிறது.

நாம் குறிப்பிடுவதாவது: "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லோரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா**?**" (1 கொரிந்தியர் 10:16, 17)

"திராட்சப்பழரசமானது" நமது கர்த்தரால் கொடுக்கப்பட்ட பலியின் ஜீவனை அடையாளப்படுத்துகிறது. "இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மரணத்தில் கொடுக்கப்பட்ட ஜீவனுக்கான அடையாளம்). "நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்." (மத்தேயு 26:27,28)

பாவத்தினால் ஆதாமின் சந்ததி இழந்துபோன ஜீவனுக்கான மீட்கும் பொருளாக கர்த்தர் தமது ஜீவனை கொடுத்தின் மூலமே, புது உடன்படிக்கையின் கீழாக, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக மனிதர்களுக்கு ஜீவனுக்கான உரிமை வரும். (ரோமர் 5;18, 19) சிந்தப்பட்ட இரத்தமானது "அனைவருக்குமான மீட்டும் பொருளாக" (விலைக் கிரயமாக) இருந்தது. இது அனைவருக்காகவும் நமது மீட்பராலே கொடுக்கப்பட்டது. ஆனால் அவர் பாத்திரத்தை எடுத்து சீஷர்களிடம் கொடுத்து அதில் பானம் பண்ணும்படி கூறினது, தமது பாடுகளில் பங்காளிகளாவதற்கான அல்லது பரிசுத்த பவுல் குறிப்பிட்டது போன்று "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிறதற்கான" அழைப்பாக இருந்தது. (கொலோசெயர் 1:24) நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, கிறிஸ்துவின் பாடுகளில் நாமாக முன்வந்து பங்குபெறுவோமானால், நாம் தேவனால் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாகவும், இயேசுவின் பாடுகளில் பங்கடைபவர்களாகவும் கருதப்படுவோம் என்பதே நமக்கு முன் வைக்கப்பட்ட காரியமாக இருக்கிறது. (2 தீமோத்தேயு 2:12; அப்போஸ்தலர் 9:1–5) "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் அபிஷேகம் பண்ணப்பட்டவரின் இரத்தத்தின் (சிந்தப்பட்ட இரத்தம்– மரணம்) பங்குபெறுதலாக இருக்கிறதல்லவா**?**" (1 கொரிந்தியர் 10:16 டயக்லாட்) "பாத்திரத்தின்" மதிப்பை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாக, கிறிஸ்துவோடு கூட அவரது பாடுகள் மற்றும் அவமானத்தின் பாத்திரத்தில் பங்குபெறும் வாய்ப்பிற்காக நாம் தேவனை ஸ்தோத்தரிப்போமாக! இப்படிப்பட்ட அனைவரும் அவரோடு கூட மகிமைப்படுத்தப்படுவார்கள் என்ற நிச்சயத்தை பெறுவார்கள். (ரோமர் 8:17)

"பாத்திரமானது" அவரது அவமானத்தில் நமது பங்குபெறுதலையும், அவரது பலியில் நமது பங்குபெறுதலையும், அதாவது நமது மனுஷீக மரணத்தையும் குறிக்கிறதாய் இருக்கிறது என்பதால் நமது ஆண்டவரும் இந்த அடையாளத்தை இணைத்தார். உதாரணத்திற்கு, அவரது சிங்காசனத்தில் எதிர்கால மகிமைக்கான வாக்குறுதியை அவரது சீஷர்களில் இருவர் கேட்டபோது, நமது ஆண்டவரின் பதிலானது:

"நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று

உங்களுக்கு தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்களா? '' அவர்களது இருதயப்பூர்வமான உறுதிமொழிக்குப் பிறகு, அவர், ''என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள்'' என்றார். திராட்சப் பழமானது ரசம் (இரத்தம்) வெளியே வருமளவுக்கு பிழியப்படுவதை மாத்திரம் குறிக்காமல், அதன்பிறகு வரும் புத்துணர்வையும் குறிக்கிறது. ஆகையால் இப்பொழுது ''கிறிஸ்துவின் பாடுகளில்'' பங்குபெறும் நாம் சீக்கிரத்தில் அவரது ராஜ்யத்தில் அவரோடு கூட திராட்சரசத்தை நவமானதாய் பானம் பண்ணும்பொழுது, அவரது மகிமைகளிலும், கனங்களிலும் மற்றும் அழியாமையிலும் பங்கு பெறுவோம்.

### ''கர்த்தர் வருமளவும்''

இந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தம் என்ன? நினைவுகூருதலின் இராப்போஜனத்தை ஏற்படுத்திய நமது கர்த்தர், அதை ஆசரிப்பதில் எந்தவித எல்லைகளையும் வைக்கவில்லை. ஆகையால் நமது மீட்கும் பொருளின் பலியாகிய நமது கர்த்தரின் மரணத்திற்கும், பலிக்கான அவருடனான நமது அர்ப்பணிப்பிற்குமான நினைவுகூருதலை ஆசரிப்பதற்கு கால எல்லையை வைத்திருக்கிறார் என்று அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகளை வைத்து புரிந்து கொள்ளக் கூடாது. மாறாக, அது ஒரு காலவரம்பிற்கோ, சில வருடங்களுக்கோ ஏற்பாடு செய்யப்பட்டது என்று நினைக்காமல் கர்த்தரின் இரண்டாம் வருகை வரை தொடர்ந்து ஆசரிக்கப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். நமது கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறித்து கவனிக்கும்போது, அதைக் குறித்து பேசும் போதும், உலகத்தை ஆளுகை செய்து, ஆசீர்வதிக்கப் போகிற கிறிஸ்துவின் சபை அல்லது ராஜ்யம் கூட்டிச் சேர்க்கப்படுதலையும், கிறிஸ்துவுடன் உயர்த்தப்படுதலையும் அப்போஸ்தலர் தனது வார்த்தைகளில் உள்ளடக்கியிருக்கிறார். ஒன்றோடொன்று தொடர்புடைய ஒன்றுக்கொன்று ஒத்திருக்கும் விஷயங்களை இப்படியாக பேசுவது இன்னும் பொதுவான மற்றும் சரியான வழக்கமாக இருக்கிறது. தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்து, வல்லமையிலும் மகா மகிமையிலும் உலகத்தை ஆளுவதற்கு வந்து கொண்டிருக்கிறார். கர்த்தர் அல்லது தலையினுடைய பிரசன்னம் முதலாவது அவசியமாகும்; அதன்பிறகு அவரது சரீரத்திலுள்ள நித்திரையடைந்த அங்கத்தினர்களின் மறுரூபமடைதலும், உயிரோடிருப்பவர்களின் தூற்றுதலும், அவர்கள் படிப்படியாக அவரோடு கூட்டிச் சேர்க்கப்படுதலும் சம்பவிக்கும்.

இராஜாவானவர் தமது மகாவல்லமையை 1878–ஆம் ஆண்டு செயல்படுத்த துவங்கின காலத்திலிருந்து இராஜ்யம் ஆரம்பித்துவிட்டதாக கருதப்பட்டாலும் (வெளிப்படுத்தல் 11:17) இராஜ்யத்தின் கடைசி அங்கத்தினர் மறுரூபமடைவது அல்லது மகிமைபடுத்தப்படும் வரையில், தலையும் சரீரமும் இணைந்த கிறிஸ்து நிறைவடைந்து, அப்பம் பிட்கப்படும் வரையில் இராஜ்யமானது ஸ்தாபிக்கப்படாது. ஓர் அங்கம் பாடுபடும்போது, சரீரம் பாடுபடுகிறது; ஓர் அங்கம் மகிமையடையாதிருக்கையில் இராஜ்யமானது வல்லமையிலும் ஆளுகையிலும் முழுமையாக வராது.

''ஆகையால் நீங்கள் இந்த (பஸ்கா) அப்பத்தை புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை'' (உங்கள் நம்பிக்கை மற்றும் உறுதியை) தெரிவிக்கிறீர்கள் என்று அப்போஸ்தலர் கூறும்போது, கிறிஸ்துவின் சபை அல்லது ராஜ்யம் முழுமையாக உயர்த்தபடுதலை உள்ளடக்கிய அவரது வருகையை குறிப்பிட்டார் என்பது தெளிவாக இருக்கிறது. இராஜ்யத்தின் மகிமையே அடையாளத்தின் முடிவு என்கிற இந்த கருத்தானது, நினைவுகூருதலை ஏற்படுத்தினபோது, நமது கர்த்தர் கூறின பின்வரும் வார்த்தைகளிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். ''இது முதல் இந்த திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' (மத்தேயு 26:29)

நம்முடைய கர்த்தருடைய மரணமானது மீட்கும் பொருளின் விலைக் கிரயம் என்று நம்புகிறவர்கள் அதை அறிக்கை பண்ணி, அது தங்கள் நம்பிக்கைகள் அனைத்திற்கும் அடிப்படை என்று காண்பிப்பது சரியானதாகவும் தகுந்ததாகவும் இந்த காலம் இருக்கிறது. இதுவே தேவனுடைய வசனத்தின் அடிப்படையான உபதேசத்தை தவறாகவும் திரித்தும் கூறப்படுகிற காலமாகவும் இருக்கிறது.

### சிலாக்கியத்தை உணர்ந்துகொள்ளுதல்

இந்த வருடாந்திர சிலாக்கியத்தை யாரும் எந்த காரணத்தினாலும் புறக்கணிக்க வேண்டாம் என்று வலியுறுத்துகிறோம். இதை ஆசரிப்பதினால் விசேஷித்த ஆசீர்வாதம் இருக்கிறது. நீங்கள் உற்சாகம் குன்றியிருந்தால், உங்கள் நீதிமானாக்கப்படுதலைக் குறித்து புதிய உணர்ந்து கொள்ளுதலையும், ஒரே அப்பத்தின் அவரது சபையின், அவரது சரீரத்தின் அங்கங்களென அவரோடு கூட பிட்கப்படுவதற்கான (பலியிடுவதற்கான) உங்களது அர்ப்பணிப்பைக் குறித்த உணர்ந்து கொள்ளுதலையும் கர்த்தரிடத்தில் கேட்டு, போய் பிட்கப்பட்ட அப்பத்தில் பங்குபெறுங்கள்.

இப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, உணர்ந்துகொள்ளப்படவில்லை என்றால், நிறைவுகூருதலானது அர்த்தமற்றதாகவும் மோசமானதாகவும் காணப்படும் என்பதை நாம் மறவாதிருப்போமாக. ஆனால் பாவங்களோ, குளிரற்ற தன்மையோ, அபாத்திரன் என்ற உணர்வுகளோ நம்மை தடைசெய்யாதிருப்பதாக. கர்த்தரிடத்தில் போய் உங்கள் குறைவுகள் அனைத்தையும் அறிக்கையிடுங்கள், உங்கள் சகோதர, சகோதரிகளிடம் அல்லது யாருக்கு நீங்கள் தவறிழைத்தீர்களோ அவர்களிடம் சென்று, அவர்கள் உங்களுக்கு விரோதமாக செய்த குற்றங்களை ஒப்புக் கொள்கிறார்களோ, இல்லையோ, நீங்கள் முழுமையாக ஒப்புக் கொண்டு விடுங்கள். உங்கள் கர்த்தருடன் ஒப்புரவாகுங்கள், கூடுமானவரை யாவரிடமும் ஒப்புரவாகுங்கள். அதன் பிறகு வந்து புசியுங்கள். ஆம், இப்போழுதோ அல்லது பின்னர் ''ஏற்றக் காலத்தில்'' ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்குமாக கர்த்தர் செய்திருக்கிற ஐசுவரியமான ஏற்பாட்டில் பங்கு பெறுங்கள்.

இப்படிப்பட ஒரு இருதய ஆராய்தலும், சுத்திகரித்தலும்

யூதர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த நிழலான பஸ்காவில் காண்பிக்கப்பட்டிருப்பதை நாம் ஞாபகத்தில் கொண்டு வருவோம். தங்கள் பஸ்கா ஆட்டை புசிப்பதற்கு கூடிவருவதற்கு முன்னதாக புளிப்பானது அல்லது அழுகிப்போனது எலும்புகள் அல்லது ரொட்டித் துண்டு தங்கள் வீடுகளில் இருக்கிறதா என்று தேடிப்பார்த்து அவைகளை எரித்தார்கள் – அழித்தார்கள். ஆகையால் நாம் நிஜத்தை நிறைவேற்ற வேண்டும். கோபம், குரோதம், பகைகள், சண்டைகள் போன்ற "பழைய புளித்த மாவை புறம்பே கழித்துப் போட வேண்டும்." (1 கொரிந்தியர் 5:7,8)

இந்த வகையான பாவம் என்னும் புளிப்பானது எரிக்கப்படாமல் முற்றிலுமாக நீக்கப்பட முடியாது. அன்பு மட்டுமே – பரம அன்பு, தேவ அன்பு – அதை எரிக்க முடியும், இந்த அன்பானது நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருந்தால், எதிர்மாறான குணங்களாகிய பொறாமை, பகைமை, புறங்கூறுதல் முதலானவைகளை பட்சித்துப் போடும். இவைகளை எல்லாம் களைந்து போட்டு, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு, அவரது ஆவியினால் நிரப்பப்படும்படி அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். மனம் தளர வேண்டாம். பாடத்தைக் கற்றுக் கொண்டு, புதிய தீர்மானங்களுடன், ஆண்டவருடைய உதவியில்லாமல், பரிசை ஒரு போதும் அடைய முடியாது என்ற உண்மையை உணர்ந்து மீண்டும் ஆரம்பியுங்கள். இதை அவர் நம்மைக் காட்டிலும் அதிகம் அறிவார். மேலும் அவர் கூறுகிறதாவது: "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது." நமது தேவையின் காரணமாக, பிதா நமக்கு இப்படியாக ஏற்பாடு செய்துள்ளார். "தைரியங்கொண்டிருங்கள்!" என்பதே "ஜெயங்கொண்டவர்கள்" என்று அழைக்கப்படுகிற வகுப்பில் இருப்பதற்கு விரும்பி, பாடுபடுகிற அனைவருக்கும் ஆண்டவருடைய வார்த்தையாக இருக்கிறது.

## உங்கள் எதிராளியாகிய பிசாசு

வருஷத்தின் இந்த காலப்பகுதியில் சோதனைகள் விசேஷமாக அனுமதிக்கப்படுகிறதாக காணப்படுகிறது. எப்பொழுதும் "கசப்பான வேர்களானது" முளைத்தெழும்பி, வளர்வதாக காணப்படுகிறது. ஆனால் இந்த காலத்தில் பத்து மடங்கு பலத்துடன் வளர்கிறது. நமது சீஷத்துவத்தின் இறுதி சோதனையானது அறிவில் அல்ல, அன்பில்தான் வரக்கூடியதாக இருக்கிறது என்பதை நினைவில் வைப்போமாக. "நீங்கள் ஒருவரிவொருவர் அன்பாயிருங்கள் என்கிற ஒரு புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன்." அப்போஸ்தலர்கள் ஒருவரிலொருவர் போதுமான அன்பு கொண்டிராததால், யார் ராஜ்யத்தில் பெரியவனாய் இருப்பான் என்று வாக்குவாதம் பண்ணினார்கள்; ஒருவொருக்கொருவர் தாழ்ந்து போக மாட்டோம் என்று தீர்மானமாக இருந்தார்கள். இதனால் ஆண்டவருடைய பாதங்களை கழுவுகிறதையும் புறக்கணித்து, எளிய காரியங்களிலும் அவரே அனைவருக்கும் பணிவிடைக்காரராக இருக்கும்படி சந்தர்ப்பம் அளித்தார்கள். இந்த தவறான ஆவியே, கர்த்தரின் ஆவி குறைவுபட்டதினாலேயே எதிராளியானவனுடைய வல்லமைக்கு இடமளிக்கும்படி ஏதுவாயிற்று; யூதாஸ் காட்டிக்கொடுப்பதற்கும், பேதுரு, கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை மறுதலிப்பதற்கும் ஏதுவாயிற்று.

ஆகையால் நாம் சோதனைக்குள் விழாதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருப்போமாக; மிகவும் தாழ்மையுடனும் மிகுந்த அன்புடனும் இருப்போமாக. நமது மாபெரும் எதிராளியானவன் அந்த காலத்தைக் காட்டிலும் இயேசுவின் பின்னடியார்களுக்கு தீமை செய்யவும், அல்லது பொறியில் சிக்கவைக்கவும் அல்லது இடறப்பண்ணவும் மிகவும் துடிப்புடன் இருக்கிறான்.

நம்முடைய பாவங்களை நிவர்த்தி (திருப்தி) செய்கிற கிருபாதார பலியாக, நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாக அவரது விலையேறப்பெற்ற இரத்தம் இருக்கிறது என்ற விசுவாசத்தின் நம்பிக்கையை உடையவர்கள் அனைவரும் இந்த மகா சத்தியத்தை அறிக்கையிடுவதில் முன்பில்லாத அளவுக்கு அதிக வைராக்கியமும் ஊக்கமும் உடையவர்களாக இருப்பார்களாக. "ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (பலியாகிய) கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆகையால் நாம் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்." பேரளவிலான எந்த முதற்பேறானவர்களும் கடந்து போகப்படுவதுமில்லை. மகிமையிலுள்ள முதற்பேறானவர்களின் சபையில் அங்கமாகுவதுமில்லை; அந்த இரவில், நிழலில் நடந்தது போல, இரத்தத்தின் கீழ் இருந்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியின் புண்ணியத்தில் பங்கெடுக்கிறவர்களைத் தவிர யாரும் முதற்பேறானவர்களின் சபையில் அங்கத்தினராவதில்லை.

## யார் பங்குபெறலாம்?

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது உலகத்திற்கானதோ, பெயரளவான விசுவாசிகளுக்கோ உரியது அல்ல. (1) கிறிஸ்துவை தங்களது மீட்பராகவும், தங்களது பாவத்தை சுமப்பவராகவும் ஏற்றுக் கொண்டவர்களுக்கும். (2) அவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் தங்களை அர்ப்பணம் செய்தவர்களுக்கும் மாத்திரமே உரியது. ஆனால் இதில் யார் பங்கு பெறலாம், யார் பங்குபெறக் கூடாது என்று தீர்மானிப்பது நமக்குரியதோ அல்லது எந்த மனிதனுக்குரியதோ அல்லது ஒரு கூட்டத்தாருக்கு உரியதோ அல்ல. "அப்பத்திலும்" "பாத்திரத்திலும்" பங்குபெறுவதற்கான சரியான தகுதிகள் என்ன என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து சுட்டிக்காண்பிப்பதும், "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" என்று அப்போஸ்தலர் கூறியது போன்று சொல்வதுமே நமது கடமையாகும். (1 கொரிந்தியர் 11:28)

இப்பொழுது தேவனுடைய ஜனங்கள் இருண்ட யுகத்தின் தவறான உபதேசங்களிலிருந்து வெளியே வந்துக் கொண்டிருப்பதாலும். இந்த நினைவுகூருதலானது இன்னும் தெளிவாக புரிந்து கொள்ளப்படுவதாலும், ஒருவர் தன்னை பரிசோதனை பண்ணிக் கொள்ளுதலோ அல்லது தீர்மானிப்பதோ முன்னிருந்ததைக் காட்டியலும் இப்பொழுது மிகவும் செம்மையானதாக இருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை ஒவ்வொருவரும் தன்னிடத்திலே கேட்டுக் கொள்வார்களாக:

1. மனித குடும்பத்தில் ஓர் அங்கமாகிய நான், ஆதிபாவத்தினால் அனைவர் மேலும் வந்த மரண தண்டனைக்கு கீழாக நான் இருந்தேன் என்கிற வேதவாக்கியங்களின் போதனையை நான் நம்புகிறேனா?

2. அந்த பாவம் மற்றும் மரண தண்டனையிலிருந்து நான் தப்பித்துக் கொள்ளுவதற்கு எனக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை என்னுடைய கர்த்தர், மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் மீட்கும் பொருளின் பலியின் மூலமாகவே என்பதை நான் நம்புகிறேனா?

3. அவர் நம் நிமித்தம் தம்மை – அவரது மாம்சம், இரத்தம், மனுசீகம் – எனது மீட்கும் பொருளின் விலைக்கிரயமாக ஒப்புக் கொடுத்தார் என்றும்–அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி பாவ நிவாரண பலியாக கொடுத்தார் என்றும் நான் நம்புகிறேனா? (ஏசாயா 53:10, 12)

4. அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றபோது, மரணத்துக்குள்ளான அர்ப்பணமானது, மனுக்குலத்திற்காக தம்மையே பலி கொடுத்ததின் மூலம் நிறைவேறறப்பட்டது. அது அங்கே ஆரம்பித்து அவர் சிலுவையில் மரித்தபோது நிறைவேறி முடிந்தது என்பதை நான் காண்கிறேனா?

5. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்ததின் மூலம் அவர் பெற்ற (நித்திய ஜீவன் மற்றும் பூமியின் மீது ஆளுகை) உரிமைகளை, அதே பலியின் மூலம் விழுந்துபோன மற்றும் இறந்து கொண்டிருக்கிற மனுக்குலத்திற்கு – இறுதியில் புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொள்ளுகிற அனைவருக்கும் கொடுத்துவிட்டார் என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேனா?

6. இப்படியாக பலியிடப்பட்ட அவருடைய மாம்சமும் இரத்தமும் இவைகள் விலைக்கிரயமாக கொடுக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட அந்த ஆசீர்வாதங்களுக்கும் கிருபைகளுக்கும் அடையாளமாக இருக்கிறது என்பதை புரிந்து கொண்டுள்ளேனா?

7. அவருடைய மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் அடையாளங்களாக இருக்கும் அப்பம் மற்றும் திராட்சரசத்தில் பங்குபெறுதலானது என்னுடைய கர்த்தரின் மாம்சம் மற்றும் இரத்தம் எனக்காகவும் மற்ற அனைவருக்காகவும் வாங்கித் தந்த அந்த கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும் குறிப்பிடுகிறது என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிறேனா?

8.இப்படியாக நினைவுகூரப்பட்ட மீட்கும் பொருளை நான் இருதய பூர்மாக ஏற்றுக் கொண்டிருந்தால், அந்த மீட்கும் பொருளின் மீதான விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்ட நான், எனது மாம்சத்தையும் இரத்தத்தையும் கர்த்தரோடு கூட பிட்கப்படும்படிக்கும் அவரோடு கூட பாடுபடவும், அவரோடு கூட மரிக்கவும் என்னை கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணம் பண்ணியுள்ளேனா?

இந்த கேள்விகளுக்கு நாம் தீர்க்கமாக பதில் கொடுக்க முடியுமென்றால் நம்முடைய கர்த்தரின் சரீரத்தை தெளிவாகவும் முழுமையாகவும் உணர்ந்து கொண்டவர்களாகவும் அவரது மெச்சத்தகுந்த பலிக்கு மரியாதை கொடுப்பவர்களாகவும் இருப்போம். அப்பொழுது நாம் அதை புசிக்கலாம். புசிக்க வேண்டும். "நீங்கள் எல்லாரும் இதை புசியுங்கள்."

எனினும், பாவத்திற்கும் பாவிகளுக்கும் ஒரு மீட்கும் பொருள் தேவைப்பட்டு, கொடுக்கபட்டது என்பதை மறுப்பவர்களும், கிறிஸ்துவின் புண்ணியத்தில் பங்குபெறுவது தங்களுக்கு தேவையில்லை என்று எண்ணுகிறவர்களும், ஒருவருடைய புண்ணியத்தை மற்றவர்களுக்கு சாட்டலாம் என்பதை மறுப்பவர்களும், கிறிஸ்துவின் நீதியினால் உண்டான கல்யாண வஸ்திரத்தை களைந்து போட்டவர்களும், தங்களது சொந்த நீதியின் அழுக்கான வஸ்திரத்தை அணிவதில் சந்தோஷத்தையும் சுதந்தரத்தையும் உணருகிறவர்களும், ஒரு காலத்தில் தங்களை பரிசுத்தம் பண்ணின விலையேறபெற்ற இரத்தத்தை சாதாரணமானது, பரிசுத்தமற்றது என்று நினைப்பவர்களும், நினைவுகூருதலில் விசுவாசமில்லாத இப்படிப்பட்டிவர்களும் நினைவுகூருதலிலிருந்து விலகிக் கொள்ளும்படி அறிவுரை கூறுகிறோம். ஏனெனில் அது அவர்களது அவிசுவாசத்தில் மாய்மாலத்தை சேர்ப்பதாக மட்டுமே இருக்கும். இப்படிப்பட்டவர்கள் பங்குபெறுவது தங்களுக்கும் தங்களது மீட்கும் பொருள் இல்லை என்கிற கொள்கைகளுக்கும் கண்டனத்தை சுமத்திக் கொள்வதாகும்.

## தேவனுடைய வசனமாகிய சத்தியம்

மாபெரும் எதிராளியின் பல்வேறு வழிகளில் ஏமாற்று பேச்சுகளின் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இந்த தப்பறைகளுக்குள் சிக்கிக் கொண்ட அனைவருக்கும் நமது அறிவுரையாவது: வீணான அனைத்து மனித தத்துவ கோட்பாடுகளை ஒதுக்கிவிட்டு, மீண்டும் எளிமையான தேவனுடைய வசனங்களை, ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதே; அனைவரும் விழுந்துபோயினர்; தெய்வீக பிரமாணத்திற்கும் தீர்ப்பிற்கும் இசைவாக நம்முடைய ஒப்புரவாகுதலுக்கும் சரிகட்டப்படுதலுக்குமான ஒரே வழி நம்முடைய பாவங்களுக்கான மீட்கும் பொருளை அல்லது முழுமையான சரியான விலைக்கிரயத்தை கொடுப்பதாகும். வேறு எந்த வழியிலும் அவர் நீதியுள்ளவராகவும், பாவிகளை நீதிமானாக்குகிறவராகவும் இருக்க முடியாது. நமது கர்த்தராகிய இயேசு தேவ ஆட்டுக்குட்டி என்பதையும், நமது பாவங்களுக்கான முழு தண்டனையையும் தமது சொந்த சரீரத்தில், மரத்தில் சுமந்தார் என்பதையும், அனைவருக்குமான ஒரு முழு மீட்கும் பொருளை கொடுத்தார் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வார்களாக.

தத்துவம் மிகவும் எளிமையானது. ஆனால் ஒரு வேளை அதைச் சிலரால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை என்றால், அவர்கள் தேவன் இப்படியாக தெரிவித்திருக்கிறார் என்ற உண்மையை கிரகித்துக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புவார்களாக; அவரும் திரளாக மன்னிப்பார். கிறிஸ்துவுக்குள்ளான நமது தேவனுடைய கிருபை அனைத்திற்குமான இந்த அஸ்திபாரத்தை இன்னதென்று சகல பரிசுத்தவான்களோடும் அறிந்து கொள்ளத்தக்கதாக பரிசுத்த ஆவியினுடைய வழிகாட்டுதலையும் கண்களுக்கு அபிஷேகத்தையும் அவர்கள் கேட்பார்களாக. பலியானது தங்களது பாவங்களுக்காகவே செலுத்தப்பட்டுள்ளது என்பதையும் சிந்தப்பட்ட இரத்தமானது (கொடுக்கப்பட்ட ஜீவனானது) அனைவருக்குமான பாவமன்னிப்பையும் உறுதிபடுத்தியது என்பதையும் உணர்ந்து, பிட்கப்பட்ட

சரீரத்தையும் சிந்தப்பட்ட இரத்தத்தையும் இப்படியாக ஏற்றுக் கொண்டு, அவர்கள் சரித்திரத்தின் மாபெரும் நிகழ்வை அதாவது நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நேசகுமாரனின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டதையும், அவரது விலையேறப்பெற்ற ஜீவன் பலி செலுத்தப்பட்டதையும் நினைவு கூர்ந்து ஆசரிப்பார்களாக. எனினும் "தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழாக" இருந்து தெரிந்தே வேண்டுமென்றே அதிலிருந்து வெளியேறுகிறவர்களை இந்த வார்த்தைகளும் சரி அல்லது வேறு எந்த வார்த்தைகளும் சரி, வழியினிடத்திற்கும் சத்தியத்தினிடத்திற்கும், ஜீவனிடத்திற்கும் திருப்புவது என்பது கூடாத காரியம் என்பதை தேவனுடைய வசனத்திலிருந்து நாம் அறிகிறோம். அவர்களுக்கு கடந்து போகுதல் என்பது கிடையாது. "மனந்திரும்புதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்." (எபிரேயர் 6:4–10; 10:26–30) இந்த அன்பான புத்திகூறும் வார்த்தைகளும், இந்த உண்மையான ஆலோசனைகளும், உண்மையான நோக்கமாகிய கர்த்தருக்கும், சத்தியத்திற்கும், அறியாமல் இடறுகிற சகோதர சகோதரிகளுக்கும் ஊழியம் செய்யும் ஒரு விருப்பம் என்பதற்கு பதிலாக நம்மீது பகைமை, துர்க்குணம், பொறாமை மற்றும் ஒவ்வொரு பொல்லாங்கான உணர்வும் சாட்டப்படும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

மீட்கும் பொருளின் தத்துவத்தை முழுமையாக உணர்ந்து கொள்ளாமல், ஆனால் நமது மீட்பரின் மரணமானது நம்மை நமது குற்றங்களிலிருந்து நிவர்த்தி பண்ணி, அதன் தண்டனைகளிலிருந்து நம்மை விடுவித்தது என்ற உண்மையை பயபக்தியுடன் கூடிய உணர்ந்து கொள்ளுதலுடன் கடந்த காலங்களில் அநேகர் கர்த்தரின் சரீரத்தையும் இரத்தத்தையும் அடையாளப்படுத்துகிறவைகளில் பங்கு பெற்றிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் நினைவுகூருதலின் உண்மையான அர்த்தத்தினை உணர்ந்திருந்தனர். எனினும், சத்தியத்துடன் இணைந்துள்ள தப்பறைகளின் காரணமாக, நாம் இப்பொழுது உணர்ந்துள்ள அதன் எளிமையான தத்துவத்தை உணர்ந்து கொள்ளவில்லை.

## ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திரம்

ஆனால் சில பேப்டிஸ்ட் (Baptist) சகோதரர் பின்வருமாறு குறிப்பிடலாம்: நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்குபெறுவதற்கு ஞானஸ்நானம் ஓர் அவசியமான தகுதியாக இருக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்கு நீங்கள் மறந்து விட்டீர்கள்.

இல்லை, நாங்கள் ஞானஸ்நானத்தை மறக்கவில்லை, ஞானஸ்நானம் அவசியம் என்பதையும், நினைவுகூருதலான இராப்போஜனம் சபைக்கு மாத்திரமே உரியது என்பதையும், சபையாராக ஆவதற்கு ஒருவருக்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதையும், நாங்கள் உங்களோடு ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் சபை என்பது என்ன என்பது குறித்த காரியத்தில் நாங்கள் உங்களிடமிருந்து வேறுபடுகிறோம். பேப்டிஸ்ட் சபையானது ஒரு சபையல்ல என்று நாங்கள் எண்ணுகிறோம். மற்ற அனைத்து சபைகளைப் போல அதுவும் விழுந்துபோன மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்படுகிறது. பேப்டிஸ்ட் சபை "களை" மற்றும் "கோதுமையை" உடையதாக இருக்கிறது. ஆனால் சபையானது "கோதுமையை" மட்டுமே உடையதாக இருக்கிறது. தங்கள் சபையில் எல்லாருமே "கோதுமை" தான், "களைகளே" இல்லை என்று கிறிஸ்தவ மண்டலத்தில் உள்ள எந்த ஒரு சபைப்பிரிவும் நிச்சயமாக கூற முடியாது. ஆனால் சபை என்பது "பரலோகத்தில் பேரெழுதப்பட்ட" அனைத்து கோதுமைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. அதன் பட்டியலில் எந்த ஒரு "களையும்" இல்லை. இந்த ஒரு சபைதான் நமது கர்த்தர் ஏற்படுத்தினது. இதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும், கடந்து போகப்பட்ட சபையில் "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையில்" அங்கங்களாக வேண்டும். (எபிரேயர் 12:23)

இதுபோலவே ஞானஸ்நானத்தை குறித்த உங்களது கருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. வேதவாக்கியங்களின் கருத்து உங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்கிறது. "முதற்பேறானவர்களின் சபையின்" அங்கத்தினர் என்று ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவர்களை உங்கள் பேப்டிஸ்ட் சபையில் நீங்கள் அங்கத்தினர்களாக பெற்றிருக்கிறீர்கள். அவர்கள் உங்களது தண்ணீர் – ஞானஸ்நானம் என்கிற சோதனையில் தேர்வு அடைந்தனர். ஆனால் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற சபையின் அங்கத்தினர் அனைவருக்கும் தேவையான மாபெரும் ஞானஸ்நானம் என்னும் பரீட்சையில் தேர்வடையாதவர்களாக இருக்கின்றனர். உண்மையான ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளான (சபைக்குள்ளான) ஒரு ஞானஸ்நானமாகும். கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக மூழ்கி அல்லது ஞானஸ்நானம் பெற்று அதிலிருந்து அவரது சாயலில் ஓர் உயிர்த்தெழுதல் மூலம் பெறுகிற ஒரு ஞானஸ்நானமே உண்மையான ஞானஸ்நானம். தண்ணீரில் மூழ்குதல் என்பது கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக மனித சித்தத்தை உண்மையாக மூழ்கடிப்பதற்கு ஓர் அருமையான அடையாளமாக இருக்கிறது. மேலும் அது மரணம் வரையிலான ஒரு முழு பலிக்கு ஓர் அருமையான விளக்கமாக இருக்கிறது. இராப்போஜனத்தில் நாம் புசிக்க வேண்டிய அப்பமும் திராட்ச ரசமும் நம்முடைய கர்த்தரின் பலியின் உண்மையான ஜீவனை அளிக்கும் அம்சங்களாக இல்லாமல், அவைகளின் அடையாளங்களாக மாத்திரம் இருப்பதுபோல, தண்ணீர் ஞானஸ்நானமும் ஒரு அடையாளம் அல்லது விளக்கமேயாகும்.

ஆகையால் முழுக்காட்டுதலைப் பெற்ற சபையைத் தவிர வேறு யாரும் இராப்போஜனத்தில் பங்குபெறக்கூடாது என்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் உண்மையான மூழ்கினவர்கள் தங்கள் சித்தத்தை மரிக்கச் செய்து, கிறிஸ்துவின் சித்தத்தில் அடக்கம் செய்து அவருக்குள் புது சிருஷ்டிகளாக, புதிதான ஜீவனுள்ளவர்களாக நடக்கும்படி எழுப்பப்பெற்று தங்களது ஓட்டமானது சொல்லர்த்தமான மரணத்தில் நிறைவுபெற்று, முதலாம் உயிர்த்தெழுதலில் உண்மையான புதிய ஜீவன்களாக உயிர்த்தெழுவதற்கு காத்திருப்பவர்கள் அனைவரும், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, எங்கு இருந்தாலும் சரி, தண்ணீர் அடையாளத்தை

பண்ணியிருந்தாலும் சரி பண்ணாதிருந்தாலும் சரி, இவர்களே சபையாக, கிறிஸ்துவின் சரீரத்தின் உண்மையான அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். தங்கள் சொந்த சித்தத்தை மரிக்கச் செய்து, கிறிஸ்துவின் சித்தத்திற்கு மாத்திரம் ஜீவனுள்ளவர்களாயிருக்க இப்படி அர்ப்பணம் செய்தவர்கள், நம்முடைய கர்த்தரின் புத்திமதியானது தண்ணீர் முழுக்காட்டுதல் அல்லது அடக்கம்பண்ணும் அடையாளத்தை உள்ளடக்கியது என்பதை காண வருவார்கள். தங்கள் தலையும் கர்த்தருமானவருக்கு எல்லா காரியங்களிலும் கீழ்ப்படிந்து பின்பற்றுவதற்கு அவர்கள் சந்தோஷப்படுவார்கள். அதிலும் விசேஷமாக தாங்கள் குழந்தைகளாயிருந்தபோது தாங்கள் விசுவாசிகளாக இருக்க வில்லை என்பதையும், ஒரு துளி தண்ணீர் எந்த விதத்திலும் அடக்கம் பண்ணுதலையும் உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தாது என்பதையும் இப்பொழுது அறிகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கு பெறுவதற்கு முன்னதாக (நமது கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும்) நமக்கு காண்பித்தது போல) கூடுமானால் தண்ணீரிலும் அடக்கப்பண்ணப்பட வேண்டும் என்கிற தேவனுடைய வசனத்தில் இடம் பெறுகிற இந்த கட்டளையின் மதிப்பையும் அழகையும் காண்கிறார்கள். வேதாகம பாடங்கள், தொகுதி 6–இல் அத்தியாயம் 10–இல் புது சிருஷ்டியின் ஞானஸ்நாணம் என்ற பாடத்தை பார்க்கவும்.

கர்த்தருடைய பந்தியில் உண்மையான "கோதுமை" மட்டுமே காணப்படுவார்கள் என்று நிச்சயமாக நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. யூதாஸ் முதல் கூடுகையில் காணப்பட்டது போல சில "களைகளும்" வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் இருதயத்தை கணிக்கவோ அல்லது "களைகளிலிருந்து" "கோதுமையை" நம்மால் பிரிக்கவோ இயலாது என்பதால், இந்த பாடத்தைக் குறித்து, தேவனுடைய வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, "தேவனுடைய ஆலோசனைகள் அனைத்தையும் அறிவித்து" நமது கடமையை நாம் நிறைவேற்றுகிறோம். ஒப்புரவாகுதலின் இரத்தத்தில் தனது விசுவாசத்தையும் மீட்பரிடத்தில் தனது அர்ப்பணிப்பைக் குறித்தும் அறிக்கை பண்ணுகிற ஒவ்வொருவனும் தான் பங்குபெறலாமா அல்லது வேண்டாமா என்று முடிவு பண்ணுகிற காரியத்தை தனிப்பட்ட அவனவனிடத்தில் விட்டுவிட வேண்டும்.

## எப்படி பங்குபெறுவது

உங்களைத் தவிர, உங்கள் அயலகத்தாரில் தேவனுடைய அர்ப்பணம் பண்ணப்பட்ட ஜனங்கள் யாராவது இருந்தால், நீங்கள் அதை அறிய வேண்டும். அவர்களுக்கான மற்றும் சத்தியத்திற்கான உங்கள் உண்மையான அன்பு, நீங்கள் சத்தியத்தை பெற்றுக் கொண்ட பின்னர், அவர்களை சத்தியத்தினால் ஆசீர்வதிக்கத்தக்கதாக அவர்களை நாட உங்களை வழிநடத்தியிருக்கும். நீங்கள் ஐக்கியமும் அந்நியோந்நியமும் கொண்டிருக்கும் அப்படிப்பட்டவர்களை உங்களோடு நினைவுகூருதலில் கலந்து கொள்வதற்கு அழைக்கலாம். ஆனால் அவர்கள் மீட்கும் பொருளை மறுப்பவர்கள் என்று நீங்கள் அறிந்தால், மேலும் அவர்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு ஆளாகாதபடிக்கு அவர்களை அழைக்க வேண்டாம்.

சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி, சிலருடனோ அல்லது அநேகருடனோ கூடிக்கொள்ளுங்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியம் மற்றும் அந்நியோந்நியத்தின் ஆவி இல்லாத கும்பலோடு கூடுவதற்குப் பதிலாக, உங்களோடு கூட நினைவுகூருதலின் ஆவியுடைய கொஞ்ச பேருடன் கூடுவது நல்லது.

இந்த தருணத்திற்கு, கர்த்தர் பயன்படுத்தினது போலவும் இப்பொழுது எபிரேயர்களால் பயன்படுத்துவது போலவும் புளிப்பில்லாத அப்பத்தை (ரொட்டி Crackers) ஏற்பாடு பண்ணலாம். ஏனெனில் தூய்மையான, இனிப்பான, புளிப்பில்லாத அப்பமானது (புளிப்பு அடையாளப்படுத்துகிற) பாவத்தை அறியாத தேவ ஆட்டுக்குட்டியின் பாவமற்ற மாம்சத்தை நன்கு அடையாளப்படுத்துகிறது. அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக இருந்தார். கர்த்தர் கூறியது போல "திராட்சபழரச" பானத்தை தயார்பண்ணிக் கொள்ளுங்கள். சந்தேகத்திற்கிடமில்லாமல் அவரும் அவரது அப்போஸ்தலர்களும் புளிப்பில்லாத திராட்ச ரசத்தை பயன்படுத்தினார்கள். இந்த திராட்ச ரசம் பொருத்தமான அடையாளமாக இருக்கிறது என்று நாம் கருதுகிறோம். ஆனால் நமது கர்த்தர் நிபந்தனை விதியாமல் திராட்சபழரசம் என்று குறிப்பிடுவதால், திராட்ச வத்தல்களை கொதிக்க வைத்து அதில் கிடைக்கும் இரசத்தை பயன்படுத்துவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இதுவும் புதிதான திராட்ச ரசத்தைப் போன்றது தான்.

மனசாட்சியின்படி திராட்ச பழரசத்தை பயன்படுத்த விரும்புகிறவர்களை, திராட்ச வத்தல் மூலம் கிடைத்த ரசத்தை பயன்படுத்த நாங்கள் வற்புறுத்தவில்லை. ஆதிசபையினரிடமிருந்து நம்முடைய சூழ்நிலைகள், தட்பவெட்பம், பழக்கவழக்கங்கள் முதலானவைகள் மிகவும் வேறுபடுகிறது என்பதை நினைப்பூட்டுவதற்கு மாத்திரம் நாம் விரும்புகிறோம். பரிசுத்தவான்களில் சிலர் மாம்சீக பலவீனம் உடையவர்களாயிருக்கிறனர்; ஒருமுறை சுவைத்தால், மாபெரும் சோதனைக்கு ஏதுவாய் மீண்டும் தூண்டிவிடுகிறதாய் இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் நமது காலத்தின் வெறியூட்டும் திராட்ச ரசத்தை (Wine) கர்த்தருடைய இரத்தத்திற்கு அடையாளமாக நாம் பயன்படுத்துவதற்கு அவர் சித்தமாயிருப்பார் என்று நாம் நினைக்கலாமா? "ஒருவரும் தன் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடலாகாது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள்." (ரோமர் 14:13) மனசாட்சியின்படி ஒயின் (Wine) விருப்பப்பட்டால் மிதமான ஒயினை (Light Wine) பயன்படுத்துங்கள் அல்லது அதனுடன் கொஞ்சம் திராட்சவத்தல் இரசத்தை சேர்த்துக் கொள்ளுங்கள்.

நினைவுகூருதலின் ஆராதனை மிகவும் எளிமையாக இருக்க வேண்டும். அது பிரதானமான ஐக்கியத்திற்கான காலப்பகுதியாகும். அப்பம் மற்றும் திராட்ச ரசத்திற்காக ஒரு மேஜையை சபையின் நடுவில் ஏற்பாடு செய்யுங்கள். ஒரு துதிப்பாடலை பாடின பிறகு, சகோதரரில் ஒருவர் ஆராதனையின் நோக்கத்தினை குறிப்பிட்ட சில வார்த்தைகளில் கூறிவிட்டு, இது தொடர்பான சில வசனங்களை வேதத்திலிருந்து வாசிக்க வேண்டும்.

இன்னொருவர் நமது கர்த்தருடைய பிட்கப்பட்ட சரீரமாகிய ஜீவ அப்பத்திற்காக ஸ்தோத்திரத்தை ஏறெடுக்க வேண்டும்; அதன் பிறகு புளிப்பில்லாத அப்பமானது (வசதியாக இருந்தால் சோடா ரொட்டியானது - Soda Biscuit) பங்குபெற வந்திருக்கும் அனைவரிடத்திற்கும் அனுப்பப்பட வேண்டும். ஜீவ அப்பத்தைக் குறித்து பேசுவதற்கு அல்லது வேதாகம பாடங்கள் தொகுதி 6–இல், அத்தியாயம் 11 இன் சாராம்சத்தை சொல்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படலாம். அடுத்து "பாத்திரத்திற்காகவும்" அது அடையாளப்படுத்தும் இரத்தத்திற்காகவும் ஒரு ஸ்தோத்திரத்துடன் கூடிய ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். பிறகு "திராட்சபழரச" பாத்திரமானது பரிமாறுவதற்காக அனுப்பப்பட வேண்டும். இப்பொழுது விலையேறப் பெற்ற இரத்தத்தைக் குறித்த சில கருத்துகளை தெரிவிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படலாம். ஆனால் இந்த கூடுகையில் கலந்தாய்வு தவிர்க்கப்பட வேண்டும். மற்ற சந்தர்ப்பங்களில் விசுவாசத்திற்காக விவாதிப்பது ஏற்றதாக இருந்தாலும், இது அப்படியான ஒரு சந்தர்ப்பம் அல்ல, இது நமது கர்த்தரும் மீட்பருமாகிய பிரசன்னமாகியிருக்கும் இராஜாவினிடத்தில் ஐக்கியமும் அந்நியோந்நியமும் கொள்ளுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமாகும். யாராவது வாதம் செய்வதாக காணப்பட்டால், அவரை விட்டுவிட்டு, மற்றவர்கள், நம்முடைய ஆசீர்வாதத்திற்காகவும் ஆண்டவருடனான விசேஷித்த ஐக்கியத்திற்காகவும் அவர் நியமித்த பரிசுத்த தருணம் கெடாதபடி விவாதத்திலிருந்து விலகிக் கொள்வார்களாக.

நினைவுகூருதலை மனப்பூர்வமான வஞ்சகமற்ற இருதயங்களுடன் ஆசரிப்பவர்கள், மாபெரும் மற்றும் புத்துயிர் அளிக்கும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுவார்கள். இதற்காகவே ஆராதனையின் நடுவில், யாருமே சத்தமாக பேசாத போது அமைதி காப்பது நல்லது. அப்பொழுது கடந்த கால மற்றும் தற்கால ஆண்டவரது அன்பை உணர்ந்துகொள்ளுதலில். மரணம் வரை அவரது உண்மையுள்ள பின்னடியார்களாக இருப்பதாக கொடுக்கப்பட்ட வாக்குறுதியை புதுப்பித்தலில், கடந்த வருடத்தில் அந்த வாக்குறுதியானது கைக்கொள்ளப்பட்டது அல்லது மீறப்பட்டது என்று சிந்திப்பதில் மற்றும் நமது கர்த்தரோடு கூட உடன் சுதந்தரராகும் பரிசை பெற்றுக் கொள்ள அழைக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடுவதற்கு மீண்டும் புதிதாக தீர்மானிப்பதில் அனைவரின் இருதயங்களும் ஆண்டவருடன் ஐக்கியத்தில் மிகவும் நெருங்கி வரக்கூடும்.

நமது பாடல் புத்தகத்தில் 276ஆம் கீர்த்தனையை பாடி (ஆங்கில பாடல் புத்தகம்) ஆராதனையை முடிப்பது பொருத்தமாக இருக்கும். இதே மாபெரும் பலியை உலகெங்கிலும் உள்ள இதே போல விலையேறப்பெற்ற விசுவாசிகள் சிலர் ஆசரிக்கின்றனர் என்றும், அதே கிருபையுள்ள கர்த்தரை நினைவுகூருகிறார்கள் என்றும், அதே மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களினால் தேற்றப்பட்டு உற்சாகப்படுத்தப்படுகின்றனர் என்றும், அதே கிருபையுள்ள ராஜாவின் கிருபையினால் இன்னும் மேன்மையான ஊழியத்தை செய்து, அவரது ஊழியத்திற்கும் அவரது ஜனங்களின் ஊழியத்திற்கும் இன்னும் அதிக தியாகம் செய்வது என்று தீர்மானிப்பதையும், அதே துதிபாடலினால் ஆராதனையை நிறைவு செய்கிறார்கள் என்பதையும் நாம் உணரும் போது நமது சந்தோஷத்தை அதிகப்படுத்தும்.

*"இனிமையான நொடிகள், செழுமையான ஆசீர்வாதங்கள்,*
*இப்படியாக சிலுவை முன் நாம் கழித்தது;*
*ஜீவன், ஆரோக்கியம் மற்றும் சமாதானத்தை பெற்றிருக்கிறோம்.*
*உயிர்த்தெழுந்த பாவிகளின் நண்பரிடமிருந்து."*

முதலாம் இராப்போஜனத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டை பாடின பின்பு, புறப்பட்டுப் போனார்கள்." நாமும் அவ்வாறே செய்வோமாக. நிறைவான இருதயத்துடன் ஒவ்வொருவனும் தனது வீட்டிற்கு திரும்புவானாக. கூடுகைக்கு பின் வழக்கமாக பொதுவாக சொல்லப்படும் வாழ்த்துதல்கள், கருத்து மற்றும் அபிப்பிராயம் பறிமாறுதல் அனைத்தையும் தவிர்க்க வேண்டும் என்று யோசனை கூறுகிறோம். இப்படியாக நாம் ஆண்டவருடனான நமது ஐக்கியத்தையும் அந்நியோந்நியத்தையும் நீடித்துக் கொள்ளலாம். அடுத்த நாள் முழுவதும் இதே சிந்தையில் நாம் இருக்கலாம். வஞ்சனையற்றவருக்கு எதிராக ஜனங்களுடைய கூச்சலைக் கவனியுங்கள். எருசலேமின் ஜனங்கள் ஆசாரிய வகுப்பினரால் தூண்டப்படுவதை பாருங்கள். ஏரோதுக்கு முன்னிலையிலும் அவனது போர்ச்சேவர்கள் முன்னிலையிலும் அவர் நிற்பதைப் பாருங்கள். அவர் கேலியாக இராஜ வஸ்திரம் தரிப்பிக்கப்படுவதையும், முள்கிரீடம் தரிக்கப்படுவதையும், குட்டப்படுவதையும், உமிழப்படுவதையும் பாருங்கள்.

அவர் ஒரு குற்றவாளியாக சிலுவையில் அறையப்படுவதையும், அவர் செய்த கிருபையான செய்கைகளுக்காக பழித்துரைக்கப்படுவதையும், அதாவது "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை" என்று பழித்துரைக்கப்படுவதையும் பாருங்கள். அவர் தம்மை இரட்சித்துக் கொண்டிருக்க முடியும் என்பதையும், அவர் கேட்டுக் கொண்டிருந்தால் தம்மை பாதுகாக்கவும் விடுவிக்கவும் பன்னிரண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை பெற்றுக் கொண்டிருக்க முடியும் என்பதையும், தம்முடைய சத்துருக்களுக்காகவும், தம்மை தூற்றுகிறவர்களுக்காகவும் மரிப்பதற்கு பதிலாக அவர்களை அவர் அழித்திருக்க முடியும் என்பதையும், நமது மீட்கும் பொருளாக அவர் தம்மை மனமுவந்து ஒப்புக் கொடுத்தினாலேயே உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவனுக்கான நமது நம்பிக்கை சார்ந்திருந்தது என்பதையும் நினைவுகூருங்கள். நமக்காகவும் அனைவருக்குமான அவரது அன்பை எண்ணிப் பார்க்கையில் அது ஒரு நல்ல சிலுவை போர் வீரனாக, கஷ்டங்களை அதிகமதிகமாக சகித்துக் கொள்ளுவதற்கு அவரது பின்னடியாராக நம்மை நிச்சயமாக பலப்படுத்தும். ஆம், தமக்கு விரோதமாக பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களை சகித்த அவரை நாம் கவனிப்போமாக. நம்முடைய சோதனைக்காகவும் ஒழுக்கத்திற்காகவும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிற லேசான உபத்திரவங்களினால் இளைப்புள்ளவர்களாகவும் மனதில் சோர்வுள்ளவர்களாகவும் ஆகாதிருப்போமாக. உண்மையாக சகிக்கப்படும் பட்சத்தில் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்கும்.

### நியுயார்க், புரூக்லினில் ஆசரிப்பு

வழக்கம்போல, புரூக்லினில் உள்ள சபையார் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே" என்பதை ஆசரிப்பார்கள். ஆராதனை புரூக்ளின் மியூசிக் அக்காடமியில் நடைபெறும். ஏனெனில் புரூக்களின் ஆசரிப்புக் கூடாரத்தில் இடம் போதாது. ஆராதனை ஞாயிறு, ஏப்ரல் 20, இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இயேசுவின் மாபெரும் பாவநிவாரணத்தில் நம்பிக்கையுள்ள விசுவாசிகள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். எப்படி ஞானஸ்நானம் எடுத்தார்கள் என்பதோ, எந்த சபைப்பிரிவை சேர்ந்தவர்கள் என்பதோ, எல்லாவற்றிலுமிருந்து விடுதலையாயிருக்கிறார்களா என்பதோ முக்கியமில்லை. கர்த்தருடைய பந்தியானது அவருடையவர்களாக காணப்படும். அனைவருக்குமாகும்.

வியாதிப்பட்டிருக்கிற அல்லது அங்ககீனமானவர்கள் புரூக்களின் ஆசரிப்பு கூடாரத்திற்கு (Broklyn Tabernacle) அஞ்சல் அட்டை மூலம் விண்ணப்பித்து, அடையாளச் சின்னங்களை தங்கள் வீடுகளில் பெற்றுக் கொள்ளலாம்.

## R 5195 THE CHURCH'S PART IN THE SIN-OFFERING

## பாவ நிவாரண பலியில் சபையின் பங்கு

*"கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார்." 1 பேதுரு 2:21*

மனுக்குலம் அபூரணமாக, தேவனுக்கு திருப்தியற்றதாக மரண தண்டனை கொடுக்கப்பட்டதாக இருக்கிறது. ஆகையால் அதற்கு எந்தவித யோக்கியதையும் இல்லை. அதற்கு தகுதி இருந்திருந்தால் தேவன் அதை தண்டித்திருக்க மாட்டார். எனினும் இன்னொரு பொருளில், தேவன் விழுந்துபோன மனுக்குலத்தில் அவருக்கு எற்புடையதாக மாற்றக் கூடிய ஏதோ ஒன்றை அவர் உணர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் மனுக்குல இரட்சிப்புக்காக ஏற்பாடு செய்திருக்க மாட்டார். அவர்களில் ஒருவரை நித்திய ஜீவனுக்கு பாத்திரராக்க தேவையான நல்ல குணங்கள் போதுமான அளவுக்கு இல்லாதிருந்தும், மனுக்குலத்திற்கு ஒரு இரட்சகரை அவர் கொடுத்திருக்கிற உண்மை, மனுக்குலம் முழுவதுமாக சீரழிந்த நிலையில் இல்லை என்பதற்கு ஒரு ரூபகாரமாகிறது. ஆனால் ஒவ்வொருவரும் கொஞ்சம் யோக்கியதையை பெற்றிருக்கிறார்கள். தேவன் அதை காத்து, மதிப்புள்ளதாக மாற்ற விரும்புகிறார்.

எந்த மனிதராவது தக்கவைத்துக் கொண்ட கொஞ்சமான ஆதி பூரணத்தை மதிப்புள்ளதாக ஆக்குகிற செய்முறையே நீதிமானாக்குதல் ஆகும். தேவனுடைய யுகங்களின் திட்டத்தில் மனுக்குலத்தை பூரணத்திற்கு கொண்டு வந்து, அதன் மூலம் தேவன் அவர்களை ஏற்றுக் கொண்டு நித்திய ஜீவனை கொடுக்கிற வேலைக்காக ஓர் ஆயிரம் வருடத்தை ஒதுக்கியிருக்கிறார். இதுவே ஆயிர வருட யுகமாகும். இடையில் சுவிசேஷ யுகத்தில், ஒரு குறிப்பிட்ட வகுப்பார் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, அவர்களுக்காக தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இப்பொழுது அவர்கள், கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்பட்டதின் மூலம் பூரணராக கருதப்படுகிறார்கள்.

நீதிமானாக்கப்படாத ஒரு மனுஷன் கூட சில இயற்கையான நற்குணங்களை பெற்றிருக்கிறான். தேவன் அதிகமாக மதிக்கிற ஒரு குணம் நேர்மையான இருதயம் ஆகும். உண்மையிலேயே ஒருவருடைய தகுதி, அவருடைய நேர்மை மற்றும் விசுவாசத்தின் விகிதாச்சாரப்படி இருக்கிறது. ஒரு நேர்மையான இருதயமுள்ள மனுஷன் தனது பாவ நிலைமையை உணர ஆரம்பித்து, தேவனுடன் ஒப்புரவாக விரும்பினால், அப்படிப்பட்டவர்களை தேவனுடைய வசனம் மனுக்குலத்தின் மீட்பரை பார்க்கும்படி வழிநடத்துகிறது.

பாவத்தை விட்டுவிட்டு, கர்த்தராகிய இயேசுவை நெருங்குவதற்கான விருப்பத்தை நிரூபிக்கிற பாவிகளை அவர் தள்ளுவதில்லை. அப்படிப்பட்ட அனைவர்களின் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் அளவுக்குத்தக்கதாக அவரோடு கூட நீதிமானாக்கப்படுகிறார்கள். எழுதப்பட்டுள்ளவதாவது: "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14:6) சுமை சுமக்கிற பாவிகளை தம்மிடத்தில் நம்பிக்கை கொள்ளும்படி அழைக்கிறார். அவர் கூறுவதாவது: "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்." (மத்தேயு 11:28, 29)

இப்படியாக தேவனை நெருங்குகிற அனைவரும் முழுமையாக இல்லாதிருந்தாலும் ஓரளவுக்கு சமாதானத்தையும் நீதியையும் உடையவர்களாக இருப்பார்கள். ஆகையால் அவர்கள் பரீக்ஷார்த்தமான நீதிமான்களாக்கப்பட்டவர்களாக சொல்லப்படுவார்கள். அதாவது ஒரு நோக்கத்திற்காக நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் கூறுகிறதாவது: "இந்த எமது கிருபையின் செய்தியை நீங்கள் விசுவாசித்தீர்களானால் அந்த அளவுக்கு, நீங்கள் பெற்றிருக்கிற ஆதி பூரணத்தை அர்ப்பணம் செய்வீர்கள். அப்பொழுது நீங்கள் முழுமையாக மனித பூரணத்தை பெற்றிருப்பதாக கருதி, நான் உங்களுடன் தொடர்பு கொள்ளுவேன். நீங்கள் விசுவாசத்தினால் உங்கள் சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தால் (ரோமர் 12:1,2) அந்த சரீரம், முழு மனித பூரணத்தின் மதிப்பில் பாதி அளவோ அல்லது மூன்றில் ஒரு பங்குக்கு மேலாக இல்லாதிருந்தாலும், நான் கிறிஸ்துவின் புண்ணியத்தை கொடுத்து உங்கள் குறைவை நிறைவாக்குவேன். இப்படியாக நீங்கள் முழுமையை பெற்றிருப்பதாக, நீங்கள் நூறு சதவீதம் பூரணத்தை பெற்றிருப்பதாக கருதப்படுவீர்கள்."

சுவிசேஷ யுகத்தில் மட்டுமே இந்த ஆச்சரியமான சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு ஒரு விசுவாசியை நீதியின் அல்லது நேர்மையின் திட்ட அளவிற்கு கொண்டு வருவதற்கு தேவைப்படுகிற புண்ணியத்தின் அளவுதான் அவன் குறைவுபடுகிற சரியான

அளவாகும். ஒருவன் தன்னை பலியில் ஒப்புக் கொடுக்கும்போது முப்பது சதவீதம் மட்டுமே பெற்றிருந்தால், நமது கர்த்தர் எழுபது சதவீதம் அவனுக்கு சாட்டுதல் பண்ணி நூறு சதவீதமாக ஆக்குவார். இது பூரணத்தை குறிக்கிறது. அவன் அறுபத்தி ஐந்து அல்லது நாற்பத்தி ஐந்து சதவீதம் பெற்றிருந்தால், முப்பத்தி ஐந்து அல்லது ஐம்பத்தி ஐந்து சதவீதம் சாட்டுதல் இருக்கும். இப்படியாக நீதியின் முழு திட்ட அளவிற்கு கொண்டு வருவதற்கு அவனுக்கு தேவைப்படும்.

வேறு வார்த்தையில் சொல்வோமானால், ஒருவன் தனது ஜீவனை பலியில் ஒப்புக் கொடுப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தில் நுழையும் போது, நமது கர்த்தர் அவனது பலவீனத்தின் அளவுக்குத்தக்கதாக ஆமோதிக்கிறார் அல்லது அவனது பலி ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக ஆகும்படி, அவனது குறைவுக்கு தமது புண்ணியத்தை சாட்டுதல் பண்ணுகிறார். இந்தக் குறைவு உண்மையிலேயே சரிபண்ணப்படவில்லை. ஆனால் சரிபண்ணியதாக கருதப்படும்படி செய்யப்படுகிறது. நீதியானது அதை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கும்படியாகவும், அவனது பலியை சமர்ப்பிக்க திராணியளிக்கும்படியான நோக்கத்துடனும் செய்யப்படுகிறது. இப்பொழுது பரிகாரியான நமது கர்த்தர், மனித பரிபூரணத்தில் குறைவுபடுகிற ஒவ்வொரு சபை அங்கத்தையும் சரி பண்ணுகிறார்.

## பரிசுத்த ஆவி ஏற்றுக் கொள்ளப்படுதலுக்கான சாட்சியம்

பரீக்ஷார்த்தமாக நீதிமானாக்கப்பட்டவர்கள் உறுதியான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் தேவனுடன் நுழைந்து ஜீவபலியாக தங்களது சரீரங்களை ஒப்புக்கொடுக்கும்போது தான் முழுமையான சமதானத்தையும் நீதிமானாக்கப்படுதலையும் பெற முடியும். இப்படியாக செய்யும்படி தீர்மானிக்கிற ஒவ்வொருவரிடமும் தெய்வீக நீதி சொல்கிறதாவது: “அந்த மனிதன் அபூரணன்; ஆகையால் இப்படிப்பட்ட ஓர் ஒப்பந்தத்தில் நுழைவதற்கு தகுதியற்றவன்; ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவனை ஆமோதித்தால் ஒப்பந்தம் செய்யப்படும்.” நமது கர்த்தர் சொல்லுகிறதாவது: “நல்லது, நான் அவனை ஆமோதிக்கிறேன். அவனது உடன்படிக்கையின்படி அவன் தானாக முன்வந்து ஜீவனை கொடுக்கவில்லை என்றாலும் அவன் மரிக்கும்படியும் அந்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படியும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன். அவன் தன் மாம்சத்தை அழிவுக்கு ஒப்புக் கொடுக்க மறுத்தால், இப்படியாக அவன் ஜீவனுக்கு அபாத்திரன் என்பதை நிரூபிக்கிறான். அவன் இரண்டாம் மரணத்துக்குப் போவான்.”

அர்ப்பணம் செய்த ஒவ்வொரு விசுவாசியும் தன்னை பலியாக ஒப்புக் கொடுக்கும்போது அது பிதாவுக்கு ஏற்புடையதாக இருக்கும்படி தமது சொந்த பலியின் புண்ணியத்தை அவனுக்கு சாட்டுகிறார். இந்த பலியை பிதாவானவர் ஏற்றுக் கொண்டபிறகு, பரிசுத்த ஆவியை அவனுக்கு கொடுக்கிறார். இதன் மூலம் அவன் பரிசுத்த ஆவியினால் புதிய சுபாவத்திற்கு ஜெநிப்பிக்கப்படுகிறான். பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டதே நிரூபணம் ஆகும்.

இப்படியாக “அநுக்கிரக காலத்தில்” சுவிசேஷ யுகத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுகிறது. எனினும் மாபெரும் இரட்சகர் மூலமாக தங்களை அர்ப்பணிக்கிறவர்கள் உண்மையான அர்த்தத்தில், அவர்கள் தங்கள் பிரயாணத்தின் முடிவுக்கு செல்லும் வரை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்த தவறலாம். ஆகையால் அவர்களது நிலைத்தல் விசுவாசத்தினாலேயாகும், கிரியைகளினாலல்ல. அவர்களில் என்ன நல்ல குணம் இருந்தாலும் அது அவர்களது பரிகாரியான கிறிஸ்துவின் புண்ணியத்தினால் தேவனுக்கு ஏற்புடையதாக ஆகும்.

கீழ்ப்படியாமையால் ஆதாம் இழந்த அவருடைய ஜீவனுக்காக மீட்கும் பொருளாக, ஒரு சரியான விலைக்கிரயமாக கொடுக்கப்பட்ட நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணமே தேவனால் ஏறபாடு செய்யப்பட்ட இந்த ஒப்புரவாகுதலுக்கு அடிப்படையாகும். இந்த கிரயத்தை, நமது கர்த்தர் ஏற்ற காலத்தில் உலகுக்கு பயன்படுத்துவதற்கு, நீதியின் கைகளில் முன்னரே வைத்திருக்கிறார். முடிவில் உலகத்திற்கு திரும்ப கொடுத்தலை கொண்டுவரப் போகிற இந்த புண்ணியமானது இப்போது சபைக்கு சாட்டப்படுகிறது. அது நமது அபூரணம் மற்றும் குறைவுகளை மூடி, பூமிக்குரிய சுபாவத்திலிருந்து விடுதலையாகி, பரலோக சுபாவத்திற்கு வருவதற்கு சாட்டப்படுகிறது.

இந்த பரிமாற்றத்தில், நம்மை நமது கர்த்தர் புது சிருஷ்டியாக, அவரது சரீரத்தின் அங்கங்களாக, நமது சரீரத்தை அவரது சரீரமாக ஏற்றுக் கொள்ளுகிறார். ஆகையால் சபையின் மாம்சத்தின் பலியானது, அவரது பலியின் தொடர்ச்சியாக இருக்கிறது. நாம் மானிடர்களாக நமது சித்தத்தை முற்றிலுமாக விட்டுவிடவேண்டும். இந்த ஏற்பாட்டின் கீழாக இது முதல் நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம். இந்த நிலைப்பாட்டின்படி நமது இரத்தம், நமது மரணம் ஆகியவற்றை தம்முடையதாக கருதி, மகிமையான வாக்குத்தத்தத்தில் நம்மை அவரோடு இணைக்கிறார்.

உலக இரட்சிப்புக்கு நமது பங்கில் பலி எதுவும் தேவையில்லை என்ற கருத்தை நமது மனதில் நன்றாக பதியவைத்துக் கொள்வோமாக, புண்ணியம் அனைத்தும் நமது கர்த்தராகிய இயேசுவில் இருக்கிறது. நமது கர்த்தர் செய்து வருகிற தெய்வீக திட்டத்தின்படி, சபையானது தற்கால பலிகளில் தனது கர்த்தருடன் பங்கு பெறும்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட சொந்த விதத்தில் அல்ல, அவரது சரீரத்தின் அங்கங்களாக பங்கு பெறுகிறது. எனினும் நமது கர்த்தரின் சொந்த புண்ணியமே சபையினுடையதை பிரியமானதாக ஆக்குகிறது.

## பாவ நிவாரண பலியில் சபையின் பங்கு

பாவ நிவாரண பலியில் சபை என்ன செய்கிறது என்ற கேள்வி கேட்கப்படலாம். பாவ நிவாரண நாளின் பலிகளின் சித்திரத்தை தேவன் நமக்கு காண்பித்திருக்காவிட்டால், என்ன பங்கு அவர்களுக்கு இருக்கிறது என்பது எங்களுக்கு தெரியாது என்பதே எங்களது பதிலாக இருந்திருக்கும். மேசியாவினால் செய்யப்பட வேண்டிய வேலையை, தேவனையும்

மனிதனையும் ஒப்புரவாக்குதலை, இஸ்ரயேலின் பாவ நிவாரண நாள் நிழலாக முன்குறித்து காண்பித்தது. பாவநிவாரண நாள் பல்வேறு அம்சங்களை உடையதாக இருந்தது. இது காளையின் பலியுடன் ஆரம்பித்தது. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பலியை சபையின் சார்பாக கொடுக்கப்பட்டதை நிழலாக காண்பித்தது. காளையின் இரத்தம் ஆசாரியனுக்காகவும் அவனது வீட்டாருக்காவும் கிருபாசனத்தில் தெளிக்கப்பட்டது, விசுவாச வீட்டார் முழுவதையும் குறிக்கிறது.

பிறகு விசுவாச வீட்டார் இரு ஆடுகளால் குறிப்பிடப்படுகிறார்கள். இதில் ஒன்று காளையின் பலியைப் போன்ற அனுபவங்களை கடந்து சென்றது. இந்த ஆடு, கர்த்தரின் அடிச்சுவடுகளை அனுதினமும் பின்பற்றுகிற விசுவாச வகுப்பாரை குறித்தது. இவர்கள் கர்த்தருடைய பாடுகளில் அவருடன் பங்கு பெறுகிறவர்களாகவும், வரப்போகிற மகிமையிலும் பங்கு பெறுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். (ரோமர் 12:1,2; எபிரேயர் 13:11–13)

மற்ற ஆடானது, தானாக மனமுவந்து மரணத்திற்கு செல்லாத, ஆனால் பாவத்திற்கு திரும்பாமல், தங்களை பலிகொடுக்க விரும்பாத, அர்ப்பணம் செய்த விசுவாச வகுப்பாரைக் குறிக்கிறது. ஆகையால் இந்த வகுப்பார் போக்காடாக கருதப்பட்டு, உபத்திரவ அனுபவங்களுக்காக வனாந்தரத்திற்கு அனுப்பிவிடப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளில் இரட்சிக்கப்படும்படி இப்படியாக சிலர் கவனிக்கப்படுவதாக இந்த வகுப்பாரைப் குறித்து பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். (1 கொரிந்தியர் 5:5)

வேத வாக்கியங்களானது கர்த்தரையும் சபையையும் பாவ நிவாரண பலியாக சித்தரிப்பதால் நாம் அதை நம்புகிறோம். பரிசுத்த பவுல் சபையை ஆட்டு வகுப்பாருக்கு நிழலாக குறிப்பிடும் போது அவர் கூறுகிறதாவது: “எந்த மிருகங்களுடைய இரத்தம் பாவங்களினிமித்தமாகப் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். அந்தப்படியே இயேசுவும், தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தஞ் செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால், நாம் அவருடைய நிந்தையை சுமந்து, பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டுப் போகக்கடவோம்.” (எபிரேயர் 13; 11–13)

என்ன மிருகங்கள் இப்படியாக நடத்தப்படுகின்றன? காளையும் கர்த்தரின் ஆடு மட்டுமே. இந்த மிருகங்களில் ஒன்றினால் இயேசு மாதிரியாகவும் சபையை ‘நாம்’ வகுப்பாராகவும் காண்பித்து, பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டு போகும்படி சொல்லி, இப்படியாக கர்த்தரின் ஆட்டிற்கு உண்மைப் பொருளாக கூறுகிறார். நாம் போவோமாக; அவரது நிந்தையை அவருடன் சுமந்து அவரது அடிச்சுவட்டில் நடப்போமாக; ஏனெனில், “அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால், அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்,” மகிமையும்படுத்தப்படுவோம். (2 தீமோத்தேயு 2:11,12)

## பூமிக்குரிய உரிமைகளை சபையானது பலியிடுதல்

நமது கர்த்தர் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் நீதியின் திட்டநிலையை பராமரித்து, தமது ஜீவனை பலியாகக் கொடுத்தார் என்ற உண்மையில் அவரது பலியின் புண்ணியம் இருக்கிறது. மானிட சுபாவத்தில் ஜீவிக்கும் உரிமையை அவர் பெற்றிருக்கிறார். அந்த உரிமையை, சபையின் ஒவ்வொரு அங்கத்தினரின் குறைவை நிறைவுபடுத்துவதற்காக சாட்டுதல் செய்ய நீதியின் கைகளில் கொடுத்திருக்கிறார். சபையானது தனது பலியை நிறைவேற்றி திரைக்குப் பின்னால் சென்றவுடன், இந்த புண்ணியமானது உலகத்தின் சார்பில் அப்பியாசப்படுத்த விடுவிக்கப்படும்.

ஆகையால் சபையானது அதன் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு ஒரு பரிசாக, தனது கர்த்தரோடு பலிகொடுக்கக்கூடிய சலுகையை பெறுவதே, பாவ நிவாரண பலியில் அதன் பங்காக இருக்கிறது. அது தன்னை ஜீவனுள்ள பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, இப்படியாக அதன் பங்கை நிறைவேற்றுகிறது. கர்த்தரின் பங்கு, பலியை ஏற்றுக் கொள்ளும்போது ஆரம்பிக்கிறது. அவர் சபைக்கு பொறுப்பேற்கிறவராக நிற்கிறார். மேலும் ஒரு பரிகாரியாக தமது கவனிப்பில் இருக்கிறவர்களுக்கு பொறுப்பாகிறார்.

சபையாக அழைக்கப்படுகிறவர்கள் தற்காலத்தில் பலியில் பங்கு பெறவும், வருங்காலத்தில் மகிமையான வேலையில் பங்கு பெறவும் சலுகை பெற்றிருக்கிறார்கள். புது உடன்படிக்கையை முத்திரையிடுவது எதிர்கால வேலையின் ஒரு பகுதியாகும். இதே அர்த்தத்தில் சபையானது முத்திரையிடுவதில் ஒரு பங்கை பெறும். அதில் அது தனது கர்த்தருடன் அவரது மகிமையில் ஒரு பங்கை பெற்றிருக்கிறது. முழு புண்ணியமும் கர்த்தரில் இருக்கிறது. அவரது கிருபையால் நாம் என்னவாக இருக்கிறோமோ, அப்படியாகவே மகிமையான வேலையில் பங்கு பெறுகிறோம். மகிமையில் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தின் நற்பண்பினால் சபையானது அவர் நிறைவேற்றப்போகிற வேலை உள்ளடக்கிய பாவ நிவாரண பலியில் பங்குபெற்று, கிறிஸ்துவினுடைய அனைத்திலும் பங்குதாரராக இருக்கிறது.

ஜீவபலியாக நம்மை ஒப்புக் கொடுக்கும்பொழுது, மரணபரியந்தம் அர்ப்பணம் பண்ணுகிறோம். அதன் பலனாக, ஏற்றுக் கொள்ளப்பட்டால், மானிட தளத்தில் ஜீவனுக்குரிய அனைத்து உரிமைகளையும் எப்பொழுதும் இழக்கிறோம். நாம் நமது ஜீவன்களை கொடுத்திருக்கிற மாபெரும் பிரதான ஆசாரியரின் கீழாக, புது ஒழுங்குகளின் ஆசாரியர்களாக ஆகும்படி நமது சரீரங்களை சமர்ப்பிக்கிறோம். அவர் அவைகளை ஏற்றுக் கொண்டால், அதனுடன் செய்வதற்கு ஏதுமில்லை. நமது பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் அவர் பெற்றுக் கொள்கிறார். அந்த உரிமைகளை நாம் வைத்திருக்கவில்லை. வேறு வார்த்தையில் சொல்வோமேயானால், நாம் இருப்பது முடிவடைந்தது; நமது பூமிக்குரிய அனைத்து நம்பிக்கைகள் அல்லது குறிக்கோள்களைப் பொருத்தவரை, நாம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள். அவரது பரிபூரண குணத்தினால், நமது கர்த்தர் நித்திய ஜீவனுக்குரிய உரிமையை பெற்றிருக்கிறார்.

நாம் நித்திய ஜீவனுக்குரிய உரிமையை பெற்றிருக்கவே இல்லை. நமது பலிகளை அவருடையதாக ஏற்றுக் கொண்டதினால் நம்மை ஒப்புக் கொடுக்க முடிந்தது.

பலிக்காக நம்மை ஒப்புக் கொடுக்கிறோம் என்பதே நமது எண்ணமாக இருக்க வேண்டும். நமது பலியை கர்த்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பலவந்தம் பண்ண முடியாது. ஆனால் அவர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறோம். அதை அவர் ஏற்றுக் கொள்ள பின் தொடரப்பட வேண்டும் என்பதோ, அல்லது முடிவான பலனுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்பதோ அவசியமில்லை. நீதிக்கு ஊழியம் செய்வதற்காக நம்மை நாமே ஒதுக்கிக் கொள்ளாதபடிக்கு, நல்லதை செய்யவும் நமது அண்டை வீட்டாரிடமும் சரியானபடி செயலாற்ற வேண்டும். யூத சட்டப்படி இது உண்மை, அவர்களது நியாயப்பிரமாணம் அவர்களை இப்படி செய்யும்படி கட்டுப்படுத்துகிறது. ஆனால் நமக்கு அப்படியல்ல, ஏனெனில், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." (1 கொரிந்தியர் 15:50) கிறிஸ்துவில் கிருபையில் பங்குபெறுவதின் மூலம், ஏற்ற காலத்தில் அவர் நம்மை உயர்த்தும்படிக்கு நம்முடனான அவரது உடன்படிக்கைக்கு இசைவாக நமது சரீரங்களை பலிகளாக ஒப்புக் கொடுப்போம். (1 பேதுரு 5:6) நாம் பாவத்தை சும்மா விட்டுவிடாமல், பூமிக்குரியவைகளில் நமக்குள்ள உரிமைகளையும் விட்டுவிடுகிறோம்.

### பரிகாரியின் வேலை

கர்த்தராகிய இயேசு, தம்மிடத்தில் விசுவாசம் வைத்தவர்களிடத்தில் அவர்கள் தங்களை அர்ப்பணம் செய்வதற்கு முன்னரே அவர்கள் இடத்தில் அனுதாபம் கொள்ளுகிறார் என்று சொல்லப்படுகிறது. இந்த அனுதாபம் என்பது பரிந்து பேசுதலைக்காட்டிலும் வேறானது. பரிந்துபேசுதல் என்பது தனிப்பட்டவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட நிலைமைக்கு வருவதற்கும் அதில் நிலைத்திருப்பதற்கும் கிருபையாக உதவிபுரிதல் ஆகும்.

பரிகாரி என்ற வார்த்தை சிநேகபாவமான, திறமையான ஒரு பிரதிநிதியைக் குறிக்கிறது. நாம் ஒரு வக்கீலை அமர்த்தினால், அவர், நமக்கு எதிராக வருகிற எந்த வழக்குக்கும் நமது பரிகாரியாக தோன்றி பேசுவார். அவர் உதவி நமக்கு தேவை என்றால் அவர் நமக்கு வக்கீலாக இருக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

சுவிசேஷ யுகம் முழுவதும் கிறிஸ்து மூலமாக பிதாவிடம் வந்த அனைவரின் சார்பாக தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தை தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்த பொழுது, சபையின் பரிகாரியாக நமது கர்த்தரின் வேலை ஆரம்பித்தது. (எபிரேயர் 9:24) நம்மை ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க ஏற்புடைய நிலைமைக்கு வரும்பொழுது தனிப்பட்ட விதத்தில் அவர் நமது பரிகாரியாக ஆகிறார். கிறிஸ்துவின் புண்ணியத்தை நம்மேல் சாட்டுவதிலும் நமது தவறுகள் அவர் மேல் சாட்டப்படுவதிலும் நாம் பண்ணுவதற்கு ஒன்றுமில்லை. இது பிதாவானவரின் ஏற்பாடு. தேவன் நம்மை அங்கீகாரம் பண்ணுவதேயில்லை; ஏனெனில் இயற்கையாகவே நாம் பாவிகள். நாம் பெற்றிராத, ஆனால் நமது தலையானவர் பெற்றிருக்கிற புண்ணியத்தை நமக்கு அவர் சாட்டினால் தவிர நமது பலிகளை அவர் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த அர்த்தத்தில் நமது கர்த்தரின் புண்ணியம் நம் மேலும் நமது தவறுகள் அவர்மேலும் சாட்டப்படுகிறது.

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு பணம் அனுப்பினால், அது 'ஆ' என்பவரின் கணக்கில் பற்று வைக்கப்பட்டு, 'அ' என்பவரின் கணக்கில் குறைக்கப்படும். ஒருவர் வேறொருவருக்கு புண்ணியத்தை சாட்டினால், சாட்டப்பட்டவர் புண்ணியத்தை பெறுகிறார், சாட்டியவர் சாட்டப்பட்டவரின் தவறுகளை சாட்டப் பெறுகிறார். முடிவாக உலகத்திற்கு போக வேண்டிய நமது கர்த்தரின் புண்ணியம், இந்த அளவுக்கு தற்காலிகமாக நமது குறைகள் நிரப்பப்படுகிறது. உடன்படிக்கையின் நமது பங்கை நிறைவேற்றும் வரை அந்த புண்ணியம் விடுவிக்கப்படாது.

### களங்கம், கறைகள் மற்றும் திரை (சுருக்கம்) வரையறுக்கப்படுகிறது

கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம், அதாவது கலியாண வஸ்திரம் ஒரு குறிப்பிட்ட மாபெரும் சத்தியத்தை விளக்குவதற்கு ஒரு அழகான உருவகமாக இருக்கிறது. புது சிருஷ்டிகள் மாத்திரமே, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே, தண்டனைக்கு கீழாக இல்லாதபடியினால், அவர்கள் மாம்சத்தில் இருப்பதாக கருதப்படாததால், அவர்களிடம் பாவமில்லை என்று சொல்வது தகாததாக இருக்க முடியாது. "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்." (1 யோவான் 3:9)

புது சிருஷ்டி பாவம் செய்கிறவர்களாக இருந்தால், மரண தண்டனைக்கு உள்ளாவார்கள். புதுசிருஷ்டியில் பாவமானது, சித்தம் மாறினதை, மனம் மாறினதை குறிக்கும்; புதுசிருஷ்டியாக இருப்பதும் முடிவடையும். புதுசிருஷ்டியின் அபூரணங்களை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் மூடாது; ஏனெனில் புதுசிருஷ்டியிடம் அபூரணம் ஏதும் இருக்காது. தேவனுடைய பார்வையில் புது சிருஷ்டியானது ஒரு நிலைத்திருத்தலை பெற்றிருக்கிறது. பரிசுத்தமாக, கறையற்று இருக்கிறது. மாம்சமானது புது சிருஷ்டியல்ல, ஆனால் பழையது, மரித்ததாக எண்ணப்படுகிறது. பவுல் கூறுவது போல, புத்துயிர் பெற்றதாக, உயிர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படுகிறது. (எபேசியர் 2:1–7; கொலோசெயர் 2:13; ரோமர் 6:4)

நமது உயிர்ப்பிக்கப்பட்ட மாம்சமானது, தேவ கிருபையினால், புனிதமானதாக, அவருடைய பார்வையில் விரும்பப்படத்தக்கதாக, கிறிஸ்துவோடு இணைவதற்கு, கலியாணத்திற்கு சரியான நிலைமையில் இருப்பதாகவும் எண்ணப்படுகிறது. இந்த வஸ்திரத்தில் கறைகள் காணப்படுமானால், வஸ்திரத்திலேயே அடையாளமாக காணப்படும் களங்கங்களைக் குறிக்கும். இவைகள் புதுசிருஷ்டிகளாகிய நம்முடையதல்ல, ஆனால் கொஞ்ச காலத்திற்கு புது சிருஷ்டியானது அதற்கு அதன் புது சரீரம் கொடுக்கப்படும்வரை மாம்ச கூடாரத்தில் இருக்க வேண்டும்.

களங்கங்கள் மாம்சத்தில் அபூரணமும் பலவீனமும் ஆகும். கறைகள் என்பது தெரிந்து செய்த தவறுகள் அல்ல. ஆனால் அது தேவனுடைய சித்தத்திற்கு மாறானதாக காணப்படுகிறது. இந்த கறைகள் பல்வேறு அளவுகளில் முரண்பாடுகளாக அபூரணத்தின் பல்வேறு தரங்களாக இருக்கலாம். இந்த பலவீனங்கள், தோல்விகள், குறைகள் மற்றும் தவறுகள் கூட சில குறைந்த அக்கரையின்மை, சோம்பல், சந்தர்ப்பத்தை பயன்படுத்த அசட்டை செய்வதாக இருக்கலாம். இவைகள் எல்லாம் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தில் களங்கமாக, கறையாக நினைக்கப்படாமல், (திரை) சுருக்கமாக கருதப்படலாம்.

சபையானது ஒரு கறையோ அல்லது திரையோ (சுருக்கமோ) அல்லது அது போன்ற எதுவுமே இல்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமாக இருக்கும் (எபசியர் 5:27) என்று பரிசுத்த பவுல் சொல்லும் பொழுது, நம்மை நமது கர்த்தர் முடிவாக பிதாவிடம் ஒப்புவிக்கத்தக்க பரிபூரண பரிசுத்தமுள்ள வகுப்பாராக இருக்க கூடிய எண்ணத்தை நமக்கு கொடுத்து நம்மை வாழ்த்துவதாகக் காணப்படுகிறது. இந்த உருவகம் நிச்சயமாக நமது மனதின் பூரணத்தை குறிப்பிடுகிறது. ஏனெனில் ஆதாமின் விழுகையினால், நமது சரீரமானது அந்த நிலைமைக்கு கொண்டுவரப்பட முடியாது. மனுக்குலம் அனைத்தும் பாவத்திலும் துர்க்குணத்திலும் உருவானது. (சங்கீதம் 51:5)

## ஒரு மென்மையான மனசாட்சியை பெற்றிருப்பது அவசியம்

புது சிருஷ்டியானது தனது அபூரணங்கள், தவறுகள் மற்றும் குறைகளை கண்டுபிடித்து, இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற உடனே கிருபாசனத்தண்டைக்கு செல்வது அதன் கடமையாகும். மென்மையான மனசாட்சியை பெற்றிருப்பவர்கள் தான் தங்கள் வஸ்திரத்தை கறையில்லாமல் வைத்திருப்பார்கள். இதை செய்வதில் தோல்வியுறுவதுதான் தங்கள் "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும்" உறுதிப்படுத்த தவறுதற்கான காரணமாக காணப்படுகிறது. இந்த சிறிய காரியங்களில் அவர்கள் அக்கரை இல்லாதிருக்கிறார்கள். அவர்கள் சந்தர்ப்பங்களை பயன்படுத்த அக்கரையில்லாதிருக்கிறார்கள். இப்படியாக அவர்களது வஸ்திரம் கறைபட்டு, கலியாண பண்டிகைக்கு முற்றிலும் தகுதியற்றதாக ஆகிறது.

இந்த வகுப்பார், மகா உபத்திரவத்தின் வழியாக சென்று, சரியான நேரத்தில் செய்யத் தவறியதை அதாவது "தங்களது அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுப்பார்கள்" (வெளிப்படுத்தல் 7:14) என்று வேதவாக்கியங்கள் நமக்கு காணப்பிக்கின்றன. பரிசுத்தமாகும் இந்த செயல்பாட்டின் மூலம் அவர்கள் எழும்பி, மகிமையின் கிரீடத்தை அணிவதற்கு பதிலாக குருத்தோலைகளை பிடிப்பார்கள். ஆலய வகுப்பாரின் அங்கங்களாக இருப்பதற்கு பதிலாக, ஆலயத்தின் சேவகர்களாக இருப்பார்கள்.

கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களுக்கு கிறிஸ்துவின் புண்ணியம் சாட்டப்படுதலைத்தான் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரமாக உருவகமாக சொல்லப்படுகிறது. அது "கலியாண வஸ்திரமாக" மாத்திரமல்ல, (மத்தேயு 22:11-14) மணவாட்டியின் வஸ்திரமாகவும் அழகாக சித்திரம் தீட்டி காட்டப்படுகிறது. (சங்கீதம் 45:13, 14) அங்கு மணவாட்டி சித்திரத்தையலாடையுடன் மகா ராஜாவின் முன்பாக அழைத்துக் கொண்டு வரப்படுவாள். இப்படியாக, கிறிஸ்துவின் வருங்கால மணவாட்டியாகவும் தேவனுடைய வீட்டின் அங்கங்களாகவும் நாம் முதன்முதலில் ஆகும்பொழுது, இந்த வஸ்திரம் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணத்தைப் பெறுகிறோம். எனினும் ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டிய தனிப்பட்ட வேலை இருக்கிறது.

சித்திரத்தையல் தான் விசேஷித்த வேலையாக குறிப்பிடப்படுகிறது. இதன் வேலைப்பாட்டை (Design) நாம் கிறிஸ்தவர்களாக சிரத்தையுடனான வைராக்கியத்துடன் தேட வேண்டும். ஏனெனில் அதற்கு மகா திறமையையும் மிகுந்த கவனிப்பும் தேவைப்படுகிறது. கிறிஸ்துவின் இந்த நீதியின் வஸ்திரம், தேவனுடைய பார்வையில் நம்முடையதாக குறிக்கப்படுகிறது. அது நம்முடையதாக எதிர்காலத்தில் நித்தியமாக நம்முடையதாக தொடர்ந்து இருக்கும். அது சாட்டுதல் மூலமாக நம்முடையதாக இராமல், உரிமையினால், அதைப் பெற்றிருப்போம். அந்த சமயத்தில், கர்த்தரின் கிருபையினாலும் உதவியினாலும் நமது குணலட்சணத்தை நமது இரட்சகரும் தேவனுடைய பிரியமுள்ள குமாரனுமானவரின் சாயலுக்கு ஒப்பாக்கியிருப்போம். இனி நமது களங்கங்களை மூடுவதற்கு கிறிஸ்துவின் சாட்டுதல் நமக்கு தேவைப்படாது. ஏனெனில் உயிர்த்தெழுதலில் புதிய சரீரத்தில் கறைதிரை அல்லது களங்கம் எதுவும் இருக்காது. அது பூரணமாக இருக்கும்.

ஏழாம் சபையின் தூதனாகிய

சகோ, **C.T. ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்,

வெளியிடுபவர்:

சகோ, **R. செல்வராஜ்.** சென்னை வேதமாணவர் சபை.

எண்: 22. முதல் தெரு. ராஜீவ் நகர். காலடிப்பேட்டை. திருவொற்றியூர்.

சென்னை- 600 019, கைபேசி: 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com

Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**